


Follow us:

# தமிழன்
THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 529 சுபகிருது வருடம், வைகாசி மாதம் 12ஆம் திகதி வியாழக்கிழமை
(26.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 24, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50




# மைத்ரியை காப்பாற்றினார் ஜூலி!

## "ஈஸ்ரர் தினத் தாக்குதல்களுக்கு நீங்கள் சம்பந்தம் இல்லை" அமெரிக்கத் தூதுவர் கூறியதாக பகிரங்கமாக அறிவித்தார் சிறிசேன

ஈஸ்ரர் தினத் தாக்குதலுக்கும் தனக்கும் (மைத்ரி) எந்தத் தொடர்பும் இல்லையென இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் ஜூலி சங், தம்முடனான சந்திப்பொன்றின்போது தெரிவித்ததாக முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன நேற்று தெரிவித்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க, காலைவேளையில் நடத்தும் வானொலி நிகழ்ச்சியில் நேரடியாகவே கலந்துகொண்டு வழங்கிய நேர்காணலில் பேசும்போதே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடக்குமென முன்கூட்டியே தெரிந்திருந்தால் நான் வெளிநாடு சென்றிருப்பேனா? உடனடியாக ஊரடங்கு சட்டத்தை பிறப்பித்தாவது தேவையான நடவடிக்கைகளை எடுத்திருப்பேன்.

எனக்கு இதுபற்றி எந்தத் தகவலும் தெரிவிக்கப் படவில்லை.

02 பக்கம்

## சுயாதீனக் கட்சிகளுடன் ரணில் இன்று பேச்சு

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 10 சுயேச்சைக் கட்சிகள் அடங்கிய குழு இன்று பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்திக்கவுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பிரதமரை சந்திக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு இன்று மாலை பிரதமர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, பல கட்சிகளுடன் இணைந்து உருவாக்கவுள்ள கூட்டணிக்கான பெயர் குறித்து ஆலோசித்து வருவதாகவும் எந்த நேரத்திலும் தேர்தலை சந்திக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



பிரதமர் ரணில் விக்ரமசிங்க நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராக நேற்றுக் காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

## புதிய அரசியல் கூட்டணி

### விமல் வீரவங்ச அறிவிப்பு

முற்போக்கு அரசியல் கட்சிகளுடன் இணைந்து புதிய கூட்டணியை அமைக்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.



மேலும், எதிர்கால தேர்தல்களை எதிர்கொள்ளும் வகையில் கூட்டணியை பதிவு செய்ய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சட்ட அந்தஸ்து வழங்கும் கூட்டணியை பதிவு செய்வது குறித்தும் ஆலோசித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

02 பக்கம்

## ஆறு வாரங்களில் இடைக்கால வரவு - செலவுத் திட்டம்: ஒரு ட்ரில்லியன் பணம் அச்சிடுவது கட்டாயத் தேவை!

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

02 பக்கம்

## உணவு உதவிகளை வழங்க இலங்கைக்கு ஜப்பானிடமிருந்து 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்

### விசேட அறிவிப்பு நேற்று வெளியானது

02 பக்கம்

## ஈஸ்ரர் ஞாயிறு தினத் தாக்குதல் வழக்கில்

### இப்ராஹிம் ஹாஜியாருக்கு பிணை

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் தகவல்களை மறைத்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பிரபல வர்த்தகர் மொஹமட் இப்ராஹிமுக்கும் மற்றுமொருவருக்கும்...

02 பக்கம்

## சுகாதாரத்துறைக்கு 2 மில்லியன் டொலர்களை வழங்கிய இலங்கை கிரிக்கெட் நிறுவனம்

Sri Lanka Cricket

நாட்டுக்கு தேவையான அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு சுகாதாரத்துறைக்கு ஆதரவாக 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நன்கொடையாக வழங்க தீர்மானித்துள்ளது. இதன்படி, குழந்தைகளுக்கான சிறுவர் பராமரிப்புக்கு தேவையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக...

02 பக்கம்

## கடவுச்சீட்டை பெற பதிவு செய்தபின்னர் வரவும்

### குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவிப்பு



ஒரு நாள் மற்றும் சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பதற்கு முன்பதிவு செய்து நேரத்தை ஒதுக்கிக்கொண்ட பின்னர் திணைக்களத்துக்கு வருகைதருமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

02 பக்கம்

## அமெரிக்க டெக்சாஸ் மாகாண ஆரம்பப் பாடசாலையில் துப்பாக்கிச்சூடு

### 19 மாணவர்கள் - இரண்டு ஆசிரியர்கள் உட்பட 21 பேர் உயிரிழப்பு; பலர் படுகாயம்

12 பக்கம்



### உஷ்

கால்நடை அபிவிருத்தி இந்துசமய விவகார அமைச்சராக வடிவேல் சுரேஷையும் தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சராக அரவிந்தகுமாரையும் நியமிக்குமாறு அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ ரணிலிடம் கேட்டுள்ளாராம். ஏற்கனவே பதுளையில் நிமல் சிறிபால அமைச்சராக இருக்கிறார். சாமர சம்பத் இராஜாங்க அமைச்சராக இருப்பதால் தமிழர்களுக்கும் சேவையாற்ற இவர்கள் இருவரும் அரசுக்குள் வர வேண்டுமென விரும்புகிறாராம் ஹரீன்.


## அத்தியாவசிய பணியாளர்கள் மட்டுமே அரச சேவையில்

அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களை மாத்திரமே பணிக்கு அழைக்கும் வேலைத்திட்டத்தை இன்றுமுதல் மறுஅறிவித்தல் வரை முன்னெடுக்குமாறு பொதுநிர்வாக அமைச்சினால் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று சுற்றறிக்கையொன்றை விடுத்துள்ள பொதுநிர்வாக அமைச்சு, அத்தியாவசியப் பணியாளர்களை அந்தந்த நிறுவனங்களை சார்ந்த தலைவர்களே தீர்மானிக்கலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முறையான பொருளாதாரக்கொள்கை இன்றேல் இலங்கைக்கு உதவியில்லை

### உலக வங்கி விசேட அறிவிப்பு




முறையான பொருளாதாரக்கொள்கை கட்டமைப்பை நடைமுறைப்படுத்தும்வரை, இலங்கைக்கு புதிய நிதியுதவியை வழங்குவதற்கு திட்டமிடப்படவில்லை என உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மக்கள் மீது அக்கறை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள உலக வங்கி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் பரந்தளவிலான...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



இனி மைத்ரியோட பேசும் ஆக்கள் கவனமாத்தான் பேசுவாங்கள்...

# நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதியொருவர் உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான புத்தளத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று (25) அதிகாலை உயிரிழந்துள்ளதாக நீர்கொழும்பு சிறைச்சாலையின் கடமை நேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

புத்தளம் நாகவில்லு பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 45 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சந்தேகநபர் நீதிமன்றத்தின் உத்தரவின்படி, கடந்த 2017ஆம் ஆண்டு முதல் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன், இவருக்கு எதிரான வழக்கு புத்தளம் மேல் நீதிமன்றத்தில் நிலுவையிலும் உள்ளதாகவும் நீர்கொழும்பு சிறைச்சாலையின் கடமை நேர அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

மேற்படி சந்தேக நபருக்கு எதிரான வழக்கு புத்தளம் மேல்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வரும் நிலையிலேயே சந்தேக நபர் உயிரிழந்துள்ளார்.

நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த இவர், தொடர்ச்சியாக நீர்கொழும்பு சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வந்ததாகவும் நீர்கொழும்பு சிறைச்சாலையின் கடமை நேர அதிகாரியொருவர் கூறினார்.

இந்த நிலையில், சந்தேக நபருக்கு நேற்று (25) அதிகாலை திடீரென சுகயீனம் ஏற்பட்டதன் காரணமாக, அவர் மீண்டும் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் அவர் கூறினார்.

இவ்வாறு உயிரிழந்த குடும்பஸ்தரின் ஜனாஸா உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் நீர்கொழும்பு சிறைச்சாலையின் கடமை நேர அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

# இந்தியாவிலிருந்து வரும் பொருட்களை காங்கேசன்துறையில் இறக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

இந்தியாவிலிருந்து வரும் பொருட்களை காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்குவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று (25) மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இரணைமடு நீர்ப்பாசனம், உரம், அக்கராயன் குளத்தின் ஏற்று நீர்ப்பாசனம், காணி, வீட்டுத்தோட்டம் போன்ற மாவட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

அதன்பின்னர் ஊடக சந்திப்பினை மேற்கொண்டிருந்தார்.

இந்தியாவிலிருந்து வரும் பொருட்கள் அருகில் உள்ள காங்கேசன் துறைமுகத்தை தாண்டி பல தூரம் கொழும்பு செல்கிறது. இதனால் காங்கேசன் துறைமுகத்தில் இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.



வடமாகாணத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இந்திய அரசாங்கத்தினால் உரம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

# மே 09 வன்முறை: எம்.பிக்கள் இருவருக்கு மீண்டும் விளக்கமறியல்

மே 09ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த மிலன் ஜயதிலக்க உள்ளிட்ட 6 சந்தேகநபர்களை ஜூன் மாதம் 1 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று (25) உத்தரவிட்டுள்ளது. கொள்ளுப்பிட்டி மற்றும் காலிமுகத்திடலில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் இடம்பெறும் வழக்கு விசாரணைகளுக்காக அவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் கடந்த 17ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### முறையான பொருளாதாரக்...

வளர்ச்சியை மீட்டெடுப்பதற்கான பொருத்தமான கொள்கைகள் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியம்(IMF) மற்றும் பிற அபிவிருத்தி பங்காளிகளுடன் ஒருங்கிணைந்து செயற்படும் என சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைக்கு புதிய கடன் வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு உலக வங்கி தயாராவதாக, அண்மைக்காலமாக பல ஊடக அறிக்கைகள் தவறான செய்திகளை வெளியிட்டிருந்ததாக உலக வங்கி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### புதிய அரசியல் கூட்டணி...

புதிய அமைச்சரவை மற்றும் பிரதமர் குறித்து வினவியபோது, தற்போதைய நெருக்கடியில் இருந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு நாட்டுக்கு ஒரு நிர்வாகம் தேவை என்றார்.

சில முன்னாள் அமைச்சர்கள் தமது நலன்களை முன்னெடுத்துச் செல்வதற்காக நிர்வாகத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை இன்னமும் ஆற்றி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தலையிடுவதைத் தடுக்கும் வகையில், இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்றத்திற்குள் நுழைவதைத் தடுக்கும் விதிகள் போன்ற அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உள்ளடங்கிய சரத்துகளை மீண்டும் அமுல்படுத்துவதற்கு தமது தரப்பு அழுத்தம் கொடுக்கிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கடவுச்சீட்டை பெற பதிவு...

இந்த நடைமுறை கடந்த 17ஆம் திகதி முதல் நடைமுறையில் உள்ளதாகவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும், அதிக எண்ணிக்கையிலானவர்கள் முன்பதிவுகளை மேற்கொள்ளாது நேரடியாக வருகை தருவதை அவதானிக்க முடிவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடவுச்சீட்டினை பெறுவதற்கு முன்பதிவு செய்து நேரத்தை ஒதுக்கிக்கொண்டவர்களுக்கு மாத்திரம் சேவை வழங்கப்படும் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் கூறியுள்ளது.

http://www.immigration.gov.lk/ என்ற இணையத்தளத்தின் மூலம் அல்லது 070-7101060 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு முன்பதிவுகளை மேற்கொள்ளுமாறு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

### சுகாதாரத்துறைக்கு...

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு 1 மில்லியன் அமெரிக்க டொலர்களும், அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்ய தேசிய புற்றுநோய் வைத்தியசாலைக்கு 1 மில்லியன் அமெரிக்க டொலரும் நன்கொடையாக வழங்கப்படவுள்ளது.

நாட்டுக்கு தேவைப்படும் இந்த தருணத்தில் இந்த நன்கொடையை வழங்குவதில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் மிகவும் மகிழ்ச்சியடைகிறது. மேலும் இந்த சவாலான காலகட்டத்தை கடக்க எமது தேசத்திற்கு பூரண ஆதரவை வழங்குவோம் என இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவரான ஷம்மி சில்வா தெரிவித்தார். அத்தகைய உதவியின் அவசரத் தேவையை கருத்திற்கொண்டு, அந்தந்த வைத்தியசாலைகளின் அதிகாரிகளுக்கு நிதி உடனடியாக நன்கொடையாக வழங்கப்படும் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த நன்கொடைக்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழு நேற்று ஒப்புதல் அளித்தது.

### ஈஸ்ரர் ஞாயிறு தினத்...

பிணை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கி நேற்று உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் இருவரும் தலா 2 இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளிலும் செல்ல நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் இருவருக்கும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி வெளிநாட்டு பயணத்தடையும் விதித்துள்ளார்.

அத்துடன், மாதாந்தம் முதலாவது ஞாயிறுக்கிழமை சந்தேகநபர்கள் இருவரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராக வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் சுமார் 3 வருடங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதால், அவர்களின் உடல்நிலை உள்ளிட்ட விடயங்களை கருத்திற்கொண்டு அவர்களுக்கு நீதிபதி பிணை வழங்கியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் தற்கொலை குண்டுதாரிகளான மொஹமட் இல்ஹாம் மற்றும் மொஹமட் இன்ஷாப் ஆகியோரின் தந்தையே பிரபல வர்த்தகரான மொஹமட் இப்ராஹிம் என்பவர்.

பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக தகவல் அறிந்தும், அதனை பொலிஸாருக்கு தெரிவிக்காது மறைத்த குற்றச்சாட்டில் பிரபல வர்த்தகரான மொஹமட் இப்ராஹிம் உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### மைத்ரியை காப்பாற்றினார் ஜூலி!...

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை அவரது அழைப்பின் பேரில் நாடாளுமன்றத்தில் நான் அண்மையில் சந்தித்தேன். அப்போது பல விடயங்களை பேசினேன். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்கள் குறித்து சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டுமென அவர் கூறினார். அதனை நானும் வலியுறுத்தினேன். குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கூட ஒழுங்காக விசாரணை நடத்தவில்லை என்று பேராயர் கூறுகிறார் அல்லவா? அந்த தாக்குதல்கள் குறித்து இதுவரை நடத்தப்பட்ட அனைத்து விசாரணைகளிலும் எனக்கெதிராக எந்த குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படவில்லை. எனக்கு தொடர்புகள் இருப்பதாக சொல்லப்படவில்லை.

அண்மைக்காலமாக நான் வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்தித்து வருகிறேன். அண்மையில் கூட இலங்கைக்கு வந்துள்ள புதிய அமெரிக்கத் தூதுவரை நான் சந்தித்தேன். அப்போது அவர் ஒரு விடயத்தைக் கூறினார். இந்த தாக்குதல் குறித்து இங்கு வந்து விசாரணை நடத்திய அமெரிக்க எவ்.பி.ஐயின் விசாரணை அறிக்கையை தாம் பார்த்ததாகவும் எனக்கு அந்த தாக்குதலில் எந்த தொடர்பும் இல்லையென்பது அதில் தெரியவந்ததாகவும் அவர் என்னிடம் நேரடியாகவே கூறினார். அதுதான் உண்மை நிலைமை.

எனவே பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படவேண்டும். சிங்கப்பூர், இந்தியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளின் புலனாய்வாளர்கள் இங்கு வந்து விசாரணை நடத்தினர். அவர்கள் எவரும் இதில் நான் சம்பந்தப்பட்டிருப்பதாக சொல்லவில்லை.

அப்படியான தாக்குதலை நடத்தி, குண்டை வெடிக்கவைத்து ஆட்சியை கைப்பற்றும் தேவை கோட்டாபயவுக்கு இருக்கவில்லை. 69 இலட்சம் மக்கள் ஆட்சி மாற்றத்திற்கு தயாராகவே இருந்தனர் - என்றும் குறிப்பிட்டார்.

### உணவு உதவிகளை வழங்க...

கொழும்பு – தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவுவதற்கு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை (ரூ.600 மில்லியன்) வழங்குவதாக ஜப்பான் அரசாங்கம் நேற்று அறிவித்தது. இந்த நிதியானது, ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தினால் குழந்தைகள் மற்றும் ஆதரவு தேவைப்படும் குடும்பங்களுக்கு உணவு உதவி வழங்குவதற்கு பயன்படுத்தப்படும்.

"நாடு முழுவதும் உள்ள சுமார் 15ஆயிரம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கும் 3இலட்சத்து 80ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கும், மூன்று மாதங்களுக்கு தேவையான வலுவூட்டப்பட்ட அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவதற்கு ஜப்பான் அரசாங்கம் ஊடாக 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அவசர உதவியை வழங்கும் என்பதை நாங்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஜப்பான் கடந்த 10 ஆண்டுகளாக பாடசாலை உணவுத் திட்டத்திற்காக மொத்தம் 10 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான ஜப்பானில் தயாரிக்கப்பட்ட தகரத்திலடைக்கப்பட்ட மீன்களை வழங்குவதன் மூலம் சிறுவர்களுக்கு முக்கிய புரதத்தை வழங்கி வருகிறது.

இந்த மனிதாபிமான உதவியானது பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை மக்களுக்கு உணவு அணுகல் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்த உதவும் என நம்புகிறோம்" என இலங்கைக்கான ஜப்பானின் பதில் தூதுவர் கட்சுகி கொட்டாரோ தெரிவித்தார்.

பலவீனமடைந்துவரும் பொருளாதாரத்தால் இலங்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக உணவு உட்பட அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் உணவு விலைகள் அதிகரிப்பு, குடும்பங்கள் மலிவு விலையில் ஆரோக்கியமான உணவைப் பெறுவதற்கு தடையாக உள்ளது. தொற்றுநோய்க்கு முன்பே, சிறுவர்கள் மற்றும் பெண்களிடையே ஊட்டச்சத்து குறைபாடு விகிதம் அதிகமாக இருந்தது. ஆரம்ப வயது குழந்தைகளில் சுமார் 40 சதவீதம் பேர் தங்கள் உயரத்திற்கு மிகவும் உடல் எடை குறைந்தவர்களாக இருக்கின்றனர். மிகவும் அவசரமான தேவைகளை அடையாளம் காணும் மதிப்பீடுகளின் அடிப்படையில் அவசரகால உணவு உதவிகளை இலங்கை அரசாங்கத்திற்கு ஜப்பான் வழங்கும்" என அவர் மேலும் கூறினார்.

### ஆறு வாரங்களில் இடைக்கால...

அடுத்த ஆறுவாரங்களில் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தினை சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்க, பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு இரண்டுவருட நிவாரணத் திட்டத்திற்கு நிதியை வழங்குவதற்காக உட்கட்டமைப்பு திட்டங்களை குறைக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர்ஸ் நிறுவனத்திற்கு பேட்டியொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

அரசாங்கம் நெருக்கடிக்கு தீர்வை காணமுயலும் தருணத்தில் பணவீக்கம் அதிகரிக்கலாம். வீதிகளில் மேலும் ஆர்ப்பாட்டங்கள் அதிகரிக்கலாம்.

எனினும், அமைதியின்மை கட்டுக்கடங்காததாக மாறாது என எதிர்பார்க்கிறேன். 22 மில்லியன் மக்களை கொண்ட நாட்டில் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளவர்களுக்கு நிதிஉதவியை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வரவிருக்கும் கடினமான நாட்களை பார்க்கும்போது ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்புகள் இருக்கும் மக்கள் கஷ்டப்படும்போது அவர்கள் போராட்டங்களில் ஈடுபடுவது இயற்கையான விடயம். ஆனால் அது அரசியலமைப்பினை பலவீனப்படுத்துவதை நாங்கள் விரும்பவில்லை.

இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தில் செலவுகளை குறைப்பது முடிந்தவரை செலவுகளை குறைத்து நலன்புரித் திட்டங்களுக்கு மாற்றுவது ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எங்களுக்கு ரூபா வருமானமில்லை, தற்போது மேலும் ஒரு டிரில்லியன் ரூபாக்களை அச்சிட வேண்டும்.

வருடாந்த பணவீக்கம் எதிர்வரும் மாதங்களில் 40 வீதமாக அதிகரிக்கும். ஏற்கனவே கடும் அழுத்தத்துக்குள்ளாகியுள்ள இலங்கையின் குடும்பங்களின் மீது அழுத்தங்கள் அதிகரிக்கும்.

நிவாரண நடவடிக்கைகளுக்கான பணத்திற்காக தனது அமைச்சு நாட்டின் ஊதிப்பெருத்துள்ள அரசாங்கத்துறையில் சாத்தியமான செலவீனங்களை குறைப்பது குறித்து ஆராய்ந்து வருகின்றது.

உதாரணத்திற்கு சுகாதார அமைச்சில் செலவீனங்களை குறைக்கமுடியாது – கல்வியமைச்சில் ஓரளவு செய்யலாம். ஆனால், ஏனைய அமைச்சுகளில் செலவீனங்களை குறைக்கவுள்ளோம் என பிரதமர் தெரிவித்துள்ளார்.




தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

# யாழில் 1,06,420 குடும்பங்களுக்கு 5,000 ரூபா கொடுப்பனவு வழங்க மாவட்ட செயலகம் மூலம் விசேட நடவடிக்கை

## செயலாளர் மகேசன் நேற்று ஊடகங்களுக்கு தகவல்

## தமிழக நிவாரணத்தில் முதல்கட்டமாக 20 ஆயிரம் அரிசிப் பொதிகள், 7,500 பால்மாக்கள்

## எரிவாயு விநியோகத்துக்கு விசேட கண்காணிப்பு



(யாழ். செய்தியாளர்)

ஒரு இலட்சத்து ஆறாயிரத்து 420 குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுமென யாழ். மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், வருமானம் குறைந்த மக்களுக்கு தற்பொழுது வழங்கப்படுகின்ற தொகையை விட மேலதிகமான தொகையைச் சேர்த்து தலா 5,000 ரூபா வழங்குவதற்கு திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

அவ்வாறு நடைமுறைப்படுத்தும்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் 78 ஆயிரத்து 442 சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கும் 27 ஆயிரத்து 978 வறிய குடும்பங்களுமென மொத்தமாக ஒரு இலட்சத்து ஆறாயிரத்து 420 குடும்பங்கள் அந்த நன்மையைப் பெறுவதாக அமையும்.

இதற்கான ஏற்பாடுகளை சமுர்த்தி திணைக்களம் துரிதமாக மேற்கொண்டு வருகின்ற நிலையில் அந்த நிதி கிடைத்தவுடன் மே மற்றும் ஜூன் மாதங்களில் அந்த கொடுப்பனவு கிடைக்கும் என்றார்.

இதேவேளை, தமிழகத்தால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட உதவித் திட்டத்தில் முதற் கட்டமாக சுமார் 20 ஆயிரம் அரிசிப் பொதிகளும் ஏழாயிரத்து 500 கிலோ பால்மாவும் கிடைக்கவிருக்கின்றன. இதனை முன்னுரிமை அடிப்படையில் வறிய மக்களுக்கு பகிர்ந்தளிக்கவிருக்கின்றோம் எனவும் அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பால்மாவைப் பொறுத்தவரையில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சிறு குழந்தைகளை வைத்திருக்கும் குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

இதனைவிட மீனவர்கள் விடுத்த கோரிக்கைக்கிணங்க இந்திய அரசால் 15 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அது மிக விரைவில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு குறிப்பாக அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு பகுதி மீனவர்களுக்கு மாத்திரம் பகிர்ந்தளிக்கப்படும்.

இது மீனவர் சங்கங்கள், கடற்றொழில் திணைக்களங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக பகிர்ந்தளிக்கப்படும். சுமார் 705 மீனவர்கள் இந்த நன்மையைப் பெறவுள்ளனர் என்றார்.

மேலும், எரிவாயு விநியோகம் பங்கீட்டு அட்டைக்கேற்ப பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவையாளரின் கண்காணிப்பில் அந்தந்த பகுதி முகவர்கள் ஊடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழில் கடந்த சில தினங்களாக எரிவாயு விநியோகத்தில் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. இந்நிலையில், விநியோக நடவடிக்கைகளை குழப்பமின்றி மேற்கொள்வதற்காக நாம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு சிலிண்டர் விநியோக நடவடிக்கையில் பல நடைமுறை சிக்கல்கள் உள்ளன. அவை தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம்.

கலந்துரையாடல்களின் முடிவில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை குழப்பமின்றி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதனை குழப்பமின்றி முன்னெடுக்க அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சிலர் கறுப்பு சந்தைகளில் அதிக விலைக்கு எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்வதாக எமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன. அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன - என தெரிவித்தார்.

# மலையகத் தமிழரின் அரசியல் அபிலாஷைகளை போராட்டக்காரர்கள் உள்வாங்க உதவிடுங்கள்

## முன்னிலை சோஷலிச கட்சியிடம் மனோ எம்.பி. கோரிக்கை



இந்நாட்டில் வாழும் மலையகத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளையும் போராடும் சிங்கள இளைஞர் கவனத்திற்கொள்ள வேண்டும். அதன்மூலமே உண்மையான புதிய இலங்கையை கட்டியெழுப்ப முடியும். குறிப்பாக, பெருந்தோட்டங்களில் வாழும் உழைக்கும் மக்கள் சிறுதோட்ட நில உடைமையாளர்களாக மாற வேண்டும். வீடு கட்டி வாழ காணியும், உழைத்து வாழ விளைநிலமும் பெற்று அவர்களை வாழவைக்க விரும்பும் எமது நோக்கங்களை முன்னிலை சோஷலிச கட்சி ஆதரிக்க வேண்டும் - என தமிழ் முற்போக்கு கூட்டணியை சந்தித்த முன்னிலை சோஷலிச கட்சி தூதுக்குழுவினரிடம் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி., பிரதி தலைவர் திகாம்பரம் எம்.பி. ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசனின் இல்லத்தில் கூட்டணியினரை முன்னிலை சோஷலிச கட்சி தூதுக்குழுவின் சார்பில் அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் புபுது ஜாகொட, சஞ்சீவ பண்டார ஆகியோர் சந்தித்தனர்.

முன்னிலை சோஷலிச கட்சி தூதுக்குழுவினருக்கு, மலையக அபிலாஷை ஆவணங்களை கையளித்த கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது,

இந்நாட்டு மலையகத் தமிழரின் சனத்தொகை சுமார் பதினைந்து இலட்சம்.

இதில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் இன்னமும் தோட்ட சிறைகளுக்குள் ஒடுக்கப்பட்ட மக்களாக தோட்டக் குடியிருப்புகளில் வாழ்கிறார்கள். இந்த தோட்டக் குடியிருப்பு பிரதேசங்களை அரச பொது நிர்வாக கட்டமைப்பின் கீழ் கொண்டுவந்து, தேசிய நீரோட்டத்தில் உள்வாங்க வேண்டும்.

இதன் மூலம், நாட்டின் ஏனைய கிராமிய பிரதேசங்களில் நடைபெறுவதற்கு சமானமாக தோட்ட பிரதேசங்களிலும் கிராமசேவகர் வலயங்கள், பிரதேச செயலக வலயங்கள் நிர்ணயம் செய்யப்பட்ட வேண்டும். தோட்ட நிறுவனங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள தொழிலாளர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு, கிராமிய, பிரதேச, மாவட்ட மட்டங்களில் பரவலாக்கப்பட்ட அரச நிறுவனங்களின் நிர்வாக மற்றும் நலவுரிமை சேவைகளை பெறுகின்ற முழுமையான குடிமக்களாக தோட்டங்களில் உழைக்கும் மக்கள் உள்வாங்கப்பட வேண்டும்.

அதேவேளை, இந்த தோட்ட சிறைகளுக்குள் வாழும் மலையக மக்களை உள்ளடக்கிய மலையகத் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் அபிலாஷைகளை புரிந்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

இன்று நாட்டில் காலிமுகத்திடல் முதல் முழு நாட்டுக்குள்ளும் ஆங்காங்கே சிங்கள மக்கள் போராடுகிறார்கள். இந்த போராட்டக்காரர்கள் மத்தியில், முன்னிலை சோஷலிச கட்சிக்கு ஓரளவு செல்வாக்கு உண்டு என எமக்குத் தெரியும். ஆகவே, எமது இந்த கருத்துகளை அங்கே கொண்டுசெல்லுங்கள்.

காலிமுகத்திடலில் போராடும் வேறு பல அணியினரும், எம்முடன் தொடர்பில் இருக்கிறார்கள். அவர்கள் இன்று சொல்லும் "கோட்டா-கோ-ஹோம்" என்ற கோஷத்தை நாம் பத்தாண்டுகளுக்கு முன்னமே எழுப்பியவர்கள். நாம் ஒடுக்கப்பட்ட இனத்தை பிரதிநிதித்துவம் செய்கிறோம். போராடும் சிங்கள குழுக்களிடம் இக்கருத்துகளை நாம் கூறியுள்ளோம். இந்நாட்டில் வாழும் மலையகத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளையும் போராடும் சிங்கள இளைஞர் கவனத்திற்கொள்ள வேண்டும். அதன்மூலமே உண்மையான புதிய இலங்கையை கட்டியெழுப்ப முடியும் எனத் தெரிவித்தார்.

## நாடு முழுவதும் விசேட சோதனை நடவடிக்கை

### பெருமளவு எரிபொருள் மீட்பு

அனுமதிப்பத்திரமின்றி எரிபொருளை விற்பனை செய்வதை தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட 429 சோதனைகளின் போது பெருமளவு எரிபொருள் கைப்பற்றப் பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

27,000 லீற்றர் பெற்றோல், 22,000 லீற்றர் டீசல் மற்றும் 10,000 லீற்றர் மண்ணெண்ணெய் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்த சோதனையின்போது 137 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மதுசாரம், போதைப்பொருள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கை

## யாழ். பல்கலைக்கழகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தொடர்பிலான சமூக விழிப்புணர்வை உருவாக்குவது பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையமும் கைச்சாத்திட்டுள்ளன.

இது தொடர்பான நிகழ்வு நேற்று (25) யாழ்ப்பாணப் பலகலைக்கழகத்தில் நடைபெற்ற போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவும், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் சார்பில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் புபுது சுமணசேகரவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில், கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் கே. சுதாகர், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி சி. ரகுராம், கலைப்பீடப் பிரதிப் பதிவாளர் திருமதி அனுஷா சிவனேஸ்வரன், ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் மதுசார மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட அதிகாரி ஏ.சி.ரஹீம் மற்றும் ஏனைய அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி, மதுசாரம், புகையிலை மற்றும் போதைப்பொருட்கள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் உருவாக்கும் செயற்பாடுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் இணைந்துகொள்ளவிருக்கின்றனர்.

குறிப்பாக, மக்கள் மத்தியில் மதுசாரம், புகையிலை மற்றும் போதைப்பொருட்கள் பாவனையினால் ஏற்பட்டுவரும் சமூகச் சிக்கல்கள் பற்றிய ஊடகங்கள்வழி விழிப்புணர்விற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வதுடன், அதுதொடர்பான ஊடகப்படைப்புகளை உருவாக்கும் பணிகளிலும் அவர்கள் ஈடுபடுவர்.

அதேவேளை, இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், மதுசாரம், புகையிலை மற்றும் போதைப்பொருட்கள் பாவனைக்கு எதிரான கருப்பொருளைக்கொண்ட குறும்படப் போட்டியும், செயலமர்வுகளும் மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளன.

வடமாகாணத்தில் மதுசாரம், புகையிலை மற்றும் போதைப்பொருட்கள் பாவனையினை ஊக்குவிக்கும் ஊடகப் பண்பாடு பற்றிய ஆய்வுகளையும் மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தின் தொழில்நுட்ப வழிகாட்டலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மேற்கொள்ளவுள்ளனர்.

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் 05 நாட்களுக்கு மாத்திரமே எரிபொருள்

இம்மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர் கட்டுநாயக்க உட்பட நாட்டிலுள்ள அனைத்து விமான நிலையங்களும் மூடப்படும் அபாயம் உள்ளதாக தெரியவந்துள்ளது. இதற்குக் காரணம் ஜெட் எரிபொருள் குறைவதாகும்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இம்மாதம் 31ஆம் திகதிவரை மட்டுமே விமான எரிபொருள் இருப்பதாக விமான நிலைய மற்றும் விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக இலங்கையில் தரையிறக்கப்பட்ட பல விமானங்கள் எரிபொருள் நிரப்புவதற்காக ஏற்கனவே சென்னை திரும்பியுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் கொவிட் -19, நான்காம் கட்ட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இராணுவத்தினரால் நேற்று (25) முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)

# நாட்டில் மொட்டு பெரும்பான்மையைக்கொண்ட திரிபுபடுத்தப்பட்ட அரசாங்கமே ஆட்சியில் உள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



தற்போதைய நாடாளுமன்றத்தில் திரிபுபடுத்தப்பட்ட மொட்டு பெரும்பான்மையே உள்ளதாகவும், நிலையான வேலைத்திட்டம் இல்லாத அரசாங்கத்திற்கு எந்தவொரு நாடும் ஆதரவளிக்காது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கும் தற்போதைய நிலைமை தொடர்பில் நாட்டிலுள்ள முன்னணி தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (25) காலை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தைப் பெறுவதற்கு அல்லது சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எவ்வாறு செயற்படுவது என்பது குறித்த தீர்மானமானது நிலையானது எனவும், பட்டம் பதவிகளுக்காக ஒருபோதும் கொள்கைகளை காட்டிக்கொடுக்க மாட்டோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்நாட்டு மக்கள் கோரும் மாற்றத்திற்கு ஒருபோதும் துரோகம் இழைக்கப்போவதில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், போராட்டத்தை சீர்குலைக்கும் வேலைத்திட்டத்திற்கு தானும் ஐக்கிய மக்கள் சக்தியும் பங்களிக்கப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியால் முன்மொழியப்பட்ட அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் முற்றிலும் தூய்மையான திருத்தமாகும் எனவும், இது ஜனநாயகத்தை நிலைநாட்டும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட உயர்மட்ட திருத்தம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமரை உருவாக்காமலும் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறைமைக்கு நாட்டைக் கொண்டுவரும் நோக்கில் இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அமெரிக்காவில் உள்ள பாலர் பாடசாலையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 18 குழந்தைகள் உட்பட 21 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை பலியாகியுள்ளனர்.

டெக்சாஸ் மாகாணத்திலுள்ள உவால்டே நகரின் ராப் தொடக்கப் பள்ளியில் நுழைந்த சால்வடார் ராமோஸ் (18) என்ற இளைஞர், தனது கையிலிருந்த துப்பாக்கியைக் கொண்டு கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் 18 குழந்தைகள் மற்றும் 2 ஆசிரியர்கள் பரிதாபமாக பலியாகியுள்ளதாக டெக்சாஸ் ஆளுநர் கிரெக் அபோட் தெரிவித்துள்ளார்.

மேலும், பாடசாலையில் தாக்குதல் நடத்துவதற்கு முன்னதாக அந்த இளைஞர் தனது சொந்தப் பாட்டியை சுட்டுக் கொன்றதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸார் நடத்திய எதிர்த்தாக்குதலில் சால்வடார் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த தாக்குதலைத் தொடர்ந்து, துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட குழந்தைகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக வெள்ளை மாளிகை மற்றும் பிற அரசுக் கட்டடங்களில் அமெரிக்கக் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்கவிடுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இந்த சம்பவத்திற்கு ஜனாதிபதி பைடன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும், அமெரிக்காவில் துப்பாக்கிக் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வரும் தருணம் வந்துவிட்டதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

"எப்போதுதான் நாம் அனைவருமே துப்பாக்கிக் கலாசாரத்திற்கு எதிராக ஒருமித்த குரல் கொடுக்கப் போகிறோம்? இன்னும் சிலர் 'துப்பாக்கி சுதந்திரத்தை' ஆதரிக்கின்றனரே! துப்பாக்கி கலாசாரத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நேரம் வந்துவிட்டது. ஒவ்வொரு பெற்றோரும், ஒவ்வொரு குடிமகனும் துப்பாக்கிக் கலாச்சாரத்துக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் நிலைமையை புரிந்து கொள்ள வேண்டும். ஒரு குழந்தையை இழப்பது பெற்றோருக்கு நீங்காத சோகம். நான் 1972இல் ஒரு விபத்தில் என் மனைவியையும், மகளையும் இழந்தேன். 2015இல் என் மகன் புற்றுநோயால் இறந்தார். ஒரு குழந்தையை இழப்பது ஆன்மாவின் ஒரு துண்டைப் பிய்த்து எடுப்பது போன்று வலி தரும். நெஞ்சில் ஒரு வெறுமை ஏற்படும். ஏதோ ஒன்று உங்களை முழுவதுமாக உறிஞ்சிக் கொள்வதுபோல் இருக்கும்" என்று இந்த சம்பவத்தின் பின்னர் தெரிவித்திருக்கிறார் அமெரிக்க ஜனாதிபதி.

இந்த சம்பவத்தால் ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் ஆழ்ந்த அதிர்ச்சியும், வருத்தமும் அடைந்ததாக அவரது செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலோர் குழந்தைகள் என்பது வேதனையை மேலும் அதிகரிப்பதாக ஐ.நா. பொதுச் செயலாளரின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மே 26ஆம் திகதி, வியாழக்கிழமை

# மக்களின் நிலைமையை புரிந்துகொள்ளுங்கள்!

அமெரிக்காவில் கடந்த ஐந்து ஆண்டுகளில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான துப்பாக்கிச் சூட்டு நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. கிட்டத்தட்ட நாளுக்கொரு துப்பாக்கிச் சூடு. ஜேர்மனி, பிரான்ஸ், கனடா போன்ற நாடுகளில் துப்பாக்கிச் சூட்டினால் நடக்கும் கொலைகளின் மொத்த எண்ணிக்கையை விட அதிக உயிர்ப் பலிகள் நடப்பது அமெரிக்காவில்தான்.

துப்பாக்கி மீதான கட்டுப்பாடுகள் அதிகமுள்ள பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுக் கொலைகள் குறைவாக இருப்பது தெளிவாகத் தெரிகிறது. அப்படியானால், துப்பாக்கிக் கட்டுப்பாட்டைக் கொண்டுவந்துவிட வேண்டியதுதானே.. ஒரு வல்லரசு தேசத்தால் இதைச் செய்ய முடியாதா எனும் கேள்வி தோன்றலாம். எளிதாகச் செய்ய முடியாது என்பதே உண்மை.

18ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் அரசிடமிருந்து விடுதலை பெறுவதற்கான அமெரிக்க புரட்சிப் போரில் விடுதலைக்காக போராடிய அமெரிக்கத் தரப்பு அரசியல் ரீதியாகத் தங்களைக் கட்டமைத்துக்கொள்ள முடிந்தாலும், ஒட்டு மொத்த இராணுவத்தை உருவாக்கி, பேணிக்காக்க முடியவில்லை. எனவே, 'மிலிஷியா' எனப்படும் தனியார் இராணுவக் குழுக்களைக் கொண்டே போர் நடத்தப்பட்டது. விடுதலைக்குப் பிறகும் குழுக்கள் தொடர்ந்து அமெரிக்காவின் அங்கமாகவே கருதப்பட்டன. இதற்கு மிக முக்கிய காரணம் உண்டு. அமெரிக்காவின் பிதாமகர்களாகக் கருதப்படும் பலரும் மன்னராட்சியின் கீழ் இருந்தவர்கள். கிறிஸ்தவ மதம் மன்னராட்சிகளை எப்படிக் கட்டுப்படுத்தியது என்பதன் அவலத்தை நன்குணந்தவர்கள்.

எனவே, அரசு என்பது கட்டுப்பட்டதாகவும், மதத்தை விட்டு பிரிக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும் என்பதையும் முழுமையாக நம்பினார்கள். அதனடிப்படையில், தனித்தியங்கும் இராணுவக் குழுக்கள் சமூகத்தின் பாதுகாப்புக்கு அவசியம் என்ற எண்ணம் அரசியலமைப்புச் சட்டத்தை எழுதியவர்களுக்கு இருந்தது.

அடிப்படையான அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்டு, அதைத் தொடர்ந்து 10 சீர்திருத்த மேம்பாடுகள் கொண்டுவரப்பட்டன. உரிமைகளுக்கான சட்டம் என அழைக்கப்படும் இந்த அடிப்படை உரிமைகள் சார்ந்த சீர்திருத்தங்களின் இரண்டாவது இடத்தில் இருப்பது துப்பாக்கி வைத்துக்கொள்ளும் உரிமை.

"நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட மிலிஷியா, ஒரு சுதந்திர அரசின் பாதுகாப்பிற்கு அவசியம், ஆயுதங்களை மக்கள் வைத்திருப்பதற்கான உரிமை மீறப்படலாகாது" என்கிறது அந்த இரண்டாம் சட்டத் திருத்தம்.

18ஆம் நூற்றாண்டின் கடைசியில் எழுதப்பட்ட இந்த அடிப்படை உரிமை இன்று வரை அப்படியே நீடிக்கிறது. அமெரிக்கர்களின் ஊனிலும், உயிரிலும் கலந்திருக்கும் இந்த உரிமை இந்த சமூக ஆன்மாவின் இருளாக மாறிவிட்டது பெரும் சோகம். பெரும்பாலான மாகாணங்களில் சாதாரணப் பொருட்கள் வாங்கும் 'வோல்மார்ட்' போன்ற வணிகத் தளங்களில் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை எளிதாக வாங்க முடியும்.

அமெரிக்கா பூகோளரீதியில் ஆசிர்வதிக்கப்பட்ட நாடு. இருபுறமும் நீண்ட கடல்பரப்பு. மேலும், கீழும் நட்புத்தோழமை பாராட்டும் அண்டை நாடுகள் என இயற்கையாகப் பாதுகாக்கப்பட்டிருக்கும் நாடு. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் தெரிந்தோ, தெரியாமலோ உலகின் சச்சரவுகளில் இடைபட்டுக் கொண்டே இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் என்பதால், இந்த நாட்டின் எல்லைகளுக்கு வெளியே எதிரிகள் உண்டு.

ஆக, நேற்று நடந்த துப்பாக்கிச் சூடு இன்னுமொரு சம்பவம் மட்டுமே.. இரண்டு நாட்கள் ஊடகங்களும், மக்களும் பரபரப்பாகப் பேசுவார்கள். பின்னர் கலைந்து சென்றுவிடுவார்கள். ஜனாதிபதியே சம்பிரதாயத் துக்கத்தை அனுதாப செய்தியாக அனுப்பிவிட்டு தனது வேலையை பார்க்க தொடங்கிவிடுவார். மீண்டும் இது போன்றே சம்பவம் ஒன்று நடக்கும். மீண்டும் பேசுவார்கள். பின்னர் கலைவார்கள். இஸ்லாமியர் ஒருவர் சம்பந்தப்படாதவரை ஜனாதிபதியும், நாடாளுமன்றமும் சம்பிரதாய துக்கங்களை ஒற்றை வரிகளில் சொல்லி தங்கள் வேலைகளில் மூழ்குவார்கள். இது அமெரிக்காவின் சமகால வரலாறு. துப்பாக்கி துர்ப்பாக்கியம் அமெரிக்காவில் இப்போதைக்கு நின்றுவிடாது.



# பெசிலின் மறைமுக ஆட்சியும் ஆபத்தும்!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ராஜபக்ஷக்களின் சொத்தாக விளங்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தயவிலேயே இயங்கவேண்டியிருக்கும் என்று நான் ஏற்கெனவே கூறியிருந்தேன். இந்த அரசாங்கம் மக்கள் போராட்டத்துக்கு முன்னர் நிலவிய பழைய இலங்கை அரசியலின் இயல்பு திரிந்த ஒரு கேலிச்சித்திரம் போன்றே காணப்படுகிறது.

பொதுஜன பெரமுன இப்போது அபகீர்த்திக்குள்ளாகி வலுவிழந்த ஒரு சக்தியாகும். என்றாலும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்டதாக அது விளங்குகிறது. மக்களின் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலக நிர்ப்பந்திக்கப்பட்ட பின்னரான ஏற்பாடுகள் அவரும், சகோதரர்களும் பதிலாளை வைத்து (proxy) மறைமுகமாக ஆட்சிசெய்வதாகவே அமைந்திருப்பது ஒரு முரண்நகையாகும். கூத்தாட்டு பொம்மையை இயக்குபவர் சகோதரர் பெசில் ராஜபக்ஷவே.

பல கட்சிக் கருத்தொருமிப்பின் மூலமாக ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான ரோஹினி கவிரத்னவை பிரதி சபாநாயகராக நியமிப்பதற்கு விக்ரமசிங்க கொண்டிருந்த திட்டத்தை முறியடித்து கடந்தவாரம் பெசில் தனது கைவரிசையைக் காட்டினார்.

ரோஹினி நியமிக்கப்பட்டிருப்பாரேயானால் இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் பிரதி சபாநாயகர் பதவியில் அமர்ந்த முதல் பெண்மணி என்ற வரலாற்றுப் பெருமைக்கு உரியவராகியிருப்பார். அதற்கு இணங்கியிருந்தால் பொதுஜன பெரமுனவுக்கு ஒரு கௌரவமாகவும் இருந்திருக்கும். ரோஹினியின் பெயருக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அங்கீகாரமும் கிடைத்திருந்தது. பொதுஜன பெரமுன முக்கியஸ்தரான தினேஷ் குணவர்தன, பிரதி சபாநாயகர் பதவிக்கு கருத்தொருமிப்பின் அடிப்படையிலான வேட்பாளராக ரோஹினி வருவதை ஜனாதிபதி விரும்புகிறார் என்பதை கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் தெரியப்படுத்தவும் செய்தார்.ரோஹினி அவ்வாறு நியமிக்கப்பட்டிருந்தால் நாடாளுமன்றத்தில் கட்சிகள் மத்தியில் ஐக்கியம் ஏற்பட்டிருக்கிறது என்பது போன்ற ஒரு தோற்றப்பாடும் ஏற்பட்டிருக்கும்.

ஆனால், பெசில் வேறு கணக்கைப் போட்டார். அவரது அந்தரங்க ஏற்பாட்டில் பொதுஜன பெரமுன அதன் அம்பாந்தோட்டை மாவட்ட எம்.பிக்களில் ஒருவரான அஜித் ராஜபக்ஷவை பிரதி சபாநாயகர் பதவிக்கான வேட்பாளராக நியமித்தது. இரகசிய வாக்கெடுப்பில் அவர் 109 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். ரோஹினிக்கு 78 வாக்குகளே கிடைத்தன.

பெசிலின் இந்த வேட்டு, பொதுஜன பெரமுனவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சௌகரியமான முறையில் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்று இருந்திருக்கக்கூடிய எந்த எண்ணத்தையும் தகர்த்துவிட்டது. ராஜபக்ஷ குடும்பத்தின் கடைசி ஆளாக அதிகாரப்பதவியில் இருக்கும் ஜனாதிபதி கோட்டாபய, தன்னை மேலும் சில மாதங்கள் பதவியில் தொடரவிட்டால், பிறகு மானத்தைக் காப்பாற்றிக்கொண்டு பதவியில் இருந்து விலகுவதற்கு வழங்கப்படக்கூடிய வாய்ப்புக்காக அவரது குடும்பம் நீண்டகாலமாகப் பேணி வளர்த்த வம்ச ஆட்சி அபிலாஷைகளை தியாகம் செய்யத் தீர்மானித்திருக்கிறார் போல் தோன்றியது.

ராஜபக்ஷக்கள் சகலருக்குள்ளும் மிகவும் சர்ச்சைக்குரியவரான பெசில்தான் தற்போதைய நிலைவரம் மாற்றமடைந்தால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகக் கூடியவர். அரசாங்கத்தை சுதந்திரமாக ஆட்சிசெய்ய விட்டால் பெசில் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் பலவற்றின் மீதான விசாரணைகள் துரிதப்படுத்தப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது. அடிமைத்தனமான நீதிபதிகள் இதுவரையில் அவருக்கு அனுகூலமான முறையில் நடந்துகொண்டார்கள். ராஜபக்ஷக்களுக்கும், அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கும் எதிரான பெருவாரியான வழக்குகளை சட்டமா அதிபர் வாபஸ் பெற்றிருக்கிறார்.

பெசிலும், திருக்குமார் நடேசனும் பணச்சலவைக்கு எதிரான சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்படுவதற்குக் காரணமான மல்வானை மாளிகை வழக்கில் பிரதான சாட்சி கீழ் நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தை பின்னர் மறுத்துரைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், நீதித்துறையில் இருக்கும் ராஜபக்ஷ சார்பானவர்களும், உயர் பதவி அதிகாரிகளும் நிலைவரம் மாறுவதை உணருகிறார்கள். தவறுகளை உணர்ந்து திருந்தி நடப்பதற்கு இவர்களை நிர்ப்பந்திப்பதற்கு அமைதிவழிப் போராட்டங்கள் போதாதென்பதால் சீற்றமடைந்த மக்கள் வன்முறையில் ஈடுபட்டது பயனைத் தந்திருக்கிறது போலும். ஆனால், அலையை தன்னால் தடுக்கமுடியாவிட்டாலும் ஓரளவு தணிக்கமுடியும் என்று பெசில் நினைக்கிறார் போல் தோன்றுகிறது.

இது ஆபத்தான ஒரு சூதாட்டம். அவருக்கு மாத்திரமல்ல, பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பயனபடுத்தி அரசாங்கத்தைப் பணயம் வைக்க அவர் முயற்சித்தால் நாடாளுமன்றத்திற்கு எஞ்சியிருக்கக்கூடிய நியாயப்பாட்டுக்கும் அது ஆபத்தானதாக அமையும்.

அடுத்துவரும் நாட்கள் பல நிகழ்வுகளைக் காணப்போகின்றன. அரசியலமைப்புக்கான 21ஆவது திருத்தம் திங்கட்கிழமை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. புதிய திருத்தம் 19ஆவது திருத்தத்தை மீளக்கொண்டு வரும். சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு அதிகாரமளிக்கும். இரட்டைப் பிரஜாவுரிமையுடையவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளை வகிக்கமுடியாது என்ற ஏற்பாட்டையும் அது மீளக்கொண்டு வரக்கூடும். அது சட்டமாக வந்தால் முதலில் பாதிக்கப்படப் போகிறவர் பெசில்தான்.

பொதுஜன பெரமுன நாடாளுமன்றத்தில் அதிகப்பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டிருக்கிறது. ஆனால், அதன் எம்.பிக்கள் சகலரும் பெசில் சொல்கிறபடி நடக்கிறவர்கள் அல்ல. அஜித் ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்றத்தில் வாக்களித்த எம்.பிக்களின் (109) எண்ணிக்கைதான் பெசிலின் பலம் என்று கணிப்பிடுவதாக இருந்தால் அது 21ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பின்போது தோற்கடிக்கப் போதுமானதல்ல. எண் கணிதத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குவோமேயானால், பெசிலுக்கு விசுவாசமான பிரிவினரும் கூட திருத்தச் சட்டமூலத்தைத் தோற்கடிக்க முயற்சிக்காமல் இருக்கக்கூடும். ஆனால், அவர்கள் அந்த சட்டமூலத்தின் ஏற்பாடுகளைத் தளர்த்துவதற்கு அல்லது தாமதிப்பதற்கு முயற்சிக்கக்கூடும். இதற்காக அவர்கள் சில சலுகைகளை அரசாங்கத்திடம் பிரதியுபகாரமாக எதிர்பார்க்கவும் கூடும்.

பெசிலின் சூழ்ச்சியால் 21ஆவது திருத்தம் தோற்கடிக்கப்படுமானால் அது நாடாளுமன்றத்தின் நம்பகத்தன்மையைப் பொறுத்தவரை பரந்தளவிலான தாக்கத்தை ஏற்படுத்தும். அண்மைய வன்முறைகளில் வீடுகளை இழந்த பொதுஜன பெரமுன எம்.பிக்கள் மீண்டும் மக்களின் சீற்றத்துக்கு ஆளாவது குறித்து ஒரு தடவைக்கு பல தடவைகள் சிந்திப்பார்கள்.

21ஆவது திருத்தத்தின் கீழ் பொதுப்பதவிகளை வகிப்பதில் பெசிலுக்கு வரக்கூடிய தகுதியின்மை, பொதுஜன பெரமுன எம்.பிக்களின் எண்ணிக்கை பெரும்பான்மை மீதான பெசிலின் பிடியைத் தளர்த்திவிடும் என்றும் இல்லை. அந்த எம்.பிக்களின் பொதுவான இயல்பு ராஜபக்ஷக்கள் மீதான அடிமைத்தனமான விசுவாசமேயாகும்.

அந்த எம்.பிக்கள் குறிப்பாக மோசமான அடிவருடிகளாக இருப்பவர்கள். ராஜபக்ஷக்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வரும் அதிசயத்தை நிகழ்த்திக் காட்டுவார்கள் என்று நம்பக்கூடியவர்கள். அதனால் பெசில் நாடாளுமன்றத்தில் இருக்கிறாரோ, இல்லையோ பொம்மைகளை ஆட்டுவிப்பதில் அவரின் ஆற்றல் குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல. சட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக தான் இப்போது அனுபவிக்கும் வரப்பிரசாதமான நிலை தொடரவேண்டும் என்பதே அவர் அக்கறைப்படக்கூடிய பிரதான சலுகையாக இருக்கக்கூடும்.


அத்தகையதொரு நிலைமை அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களைப் பொறுத்தவரை எருதுகளுக்கு சிவப்புத்துணியைக் காட்டுவது போன்றதாகும். நல்லாட்சி அரசாங்க காலத்தில் முன்னர் பிரதமராக இருந்தபோது விக்ரமசிங்க ராஜபக்ஷக்கள் விடயத்தில் மென்மையாக நடந்துகொண்டார். ஆனால், இத்தடவை அவரின் தந்திர விளையாட்டுகளுக்கு பெரிதாக இடமில்லை. இலங்கையர்களில் பெரும்பாலானவர்கள் அவரை சந்தேகத்துடன் பார்ப்பது மாத்திரமல்ல, ஏளனமும் செய்கிறார்கள். ஓரளவு நம்பகத்தன்மையை அவர் பெறுவதற்கு ஒரு வழி, உடனடி ஜனநாயக சீர்திருத்தங்கள் சிலவற்றை நடைமுறைப்படுத்துவதேயாகும். அவ்வாறு செயதாலும் கூட நாடாளுமன்றத்தில் பெசிலின் பிரிவுக்கும், விக்ரமசிங்கவின் அரசாங்கத்துக்கும் இடையில் எதிர்காலத்தில் முரண்பாடுகள் தோன்றுவதற்கு சாத்தியம் இருக்கிறது.

இது ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டுக்கு நம்பகத்தன்மையைக் கொடுக்கலாம். சகல கட்சி அரசாங்கத்தில் பங்கேற்பதற்கு சமகி ஜன பலவேகயவும், ஜனதா விமுக்தி பெரமுனவும் தொடர்ச்சியாகக் காட்டிவரும் மறுப்பில் கட்சி அரசியல் நலன் கணிப்பீட்டு வாடைவீசுகிறது. இருந்தாலும், பொதுஜன பெரமுன தொடர்ந்தும் விக்ரமசிங்கவின் காலை வாரிக்கொண்டிருந்தால் அந்த இரு கட்சிகளின் நிலைப்பாடுகள் நம்பகத்தன்மையைப் பெற வாய்ப்பு இருக்கிறது. அரசாங்கத்துக்குக் கஷ்டத்தைக் கொடுப்பதற்கு பெசில் விரும்பக்கூடியதைப் போன்றே அரசாங்கம் தோல்வி காண்பதை சஜித்தும், அவரின் கட்சியும் விரும்புவார்கள்.

கோட்டாபய உரியகாலத்தில் பதவியில் இருந்து விலகிவிடவேண்டும். ஆனால், அவரது விலகல் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்கப்போவதில்லை. பிரதமராக விக்ரமசிங்கவின் நியமனமும் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்கப்போவதில்லை. மக்களை வதைக்கும் இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இலங்கைக்கு ஓர் அரசியல் உறுதிப்பாட்டுத் தோற்றம் தேவையாகிறது. ஒரு நம்பகத்தன்மையான நிலையில் இருந்துகொண்டுதான் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை தொடரமுடியும்.

பெசில் ராஜபக்ஷ பிரிவினரின் நாடாளுமன்றப் பெரும்பான்மையால் பணயக்கைதியாக வைத்திருக்கப்படக்கூடிய ஓர் அரசாங்கம் சர்வதேச நிதிநிறுவனங்களினதும், வெளிநாட்டு அரசாங்கங்களினதும் நம்பகத்தன்மையான ஒரு பங்காளியாகத் தென்படமுடியாது. பழைய ஊழல்தனமான ஆட்சிமுறையினால் சலித்துப்போய்விட்ட இலங்கையர்களும் பதிலாள் மூலமான மறைமுக ஆட்சியை சகித்துக்கொள்ளப் போவதில்லை. அத்தகையதொரு நிலை உருவானால் நாடாளுமன்றத்துக்கு வெளியிலேயே பிரச்சினை தீர்க்கப்படும். அந்த நிலை உருவாவதை யாரும் விரும்பலாகாது.

**ரங்க ஜெயசூரிய**
**நன்றி - டெயிலி மிரர்**




## இன்றைய நாளில்...

**1637 – ஐக்கிய அமெரிக்காவின் கனெடிகட்டில் பீக்குவாட் என்ற அமெரிக்கப் பழங்குடிகளின் ஊர் ஒன்றை ஆங்கிலேயப் படையினர் தாக்கி 500க்கும் மேற்பட்ட பழங்குடியினரைக் கொன்றனர்.**

**1805 – நெப்போலியன் பொனபார்ட் இத்தாலியின் அரசனாக மிலான் பேராலயத்தில் முடிசூடினான்.**

**1864 – மொன்ட்டானா அமெரிக்கப் பிராந்தியமாக இணைந்தது.**

**1912 – இலங்கையிலிருந்து 7 பேரைக் கொண்ட முதலாவது தொகுதி சிறைக் கைதிகள் அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டனர்.**

**1958 – இலங்கை இனக்கலவரம் கொழும்புக்குப் பரவியது. தமிழர்களின் வீடுகள், கடைகள், வாகனங்கள் என்பன தீக்கிரையாக்கப்பட்டதுடன், பலரும் கொல்லப்பட்டனர்.**

**1969 – அப்பல்லோ-10 விண்கலம் மனிதனை சந்திரனுக்கு அனுப்பும் தனது அடுத்த திட்டத்திற்குத் தேவையான சோதனைகளை வெற்றிகரமாக முடித்துவிட்டு பூமிக்குத் திரும்பியது.**

**1987 – யாழ்ப்பாணம் வடமராட்சியில் இலங்கை ஆயுதப்படையினரின் ஒப்பரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றது.**

**2019 – ஆறுமுகன் தொண்டமான் மாரடைப்பு காரணமாக காலமானார்**

# சிறந்த கொள்கைத் தீர்மானங்களுக்கு அரசியல்வாதிகள் கட்சி பேதமின்றி ஒத்துழைப்பை வழங்க வேண்டும்

## அரசாங்க நிதி பற்றிய குழுவில் மத்திய வங்கியின் ஆளுநர் வேண்டுகோள்

**நெருக்கடியைத் தீர்த்து நாட்டில் நிலையான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பத் தேவையான கொள்கை ரீதியான தீர்மானங்கள் குறித்த முழுமையான அறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்கவும் பரிந்துரை**

**கடன் எல்லையை ட்ரில்லியன் ரூபாவரை அதிகரிப்பது தொடர்பான பரிந்துரையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் குழுவில் அனுமதி**





நாடு எதிர்கொண்டுள்ள தற்போதைய இக்கட்டான சூழ்நிலையின் உண்மை யதார்த்தத்தை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறுவதுடன், நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையை அடிப்படையாகக்கொண்டு எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங் களுக்கு குறுகிய அரசியல் இலாபமின்றி கட்சி பேதங்களை மறந்து ஒத்துழைப்பு வழங்குமாறும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நேற்றுமுன்தினம் (24) அரசாங்க நிதி பற்றிய குழுவில் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு முன்னர் எரிபொருளுக்கு விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டபோது இதற்கு எதிராக முன்வைக்கப்பட்ட எதிர்ப்புகளைத் தொடர்ந்து அதனை செயற்படுத்த முடியாமல்போன நிலையில் இதனை இன்று அறிமுகப்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக மத்திய வங்கி, நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் இன்று அரசாங்க நிதி பற்றிய குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தபோதே மத்திய வங்கியின் ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை தீர்த்து நாட்டில் ஸ்திரமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றும் இதற்கான பயணத் திட்டம் தொடர்பில் முழுமையான அறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா பரிந்துரைத்தார். இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரிய ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்து விளக்கமளித்த மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிடுகையில், உலக வங்கியின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் கொள்கைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 600 மில்லியன் அமெரிக்க டொலரை எதிர்காலத்தில் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்றார்.

அதேநேரம், எங்கிருந்தாவது டொலர்களைப் பெற்றுக்கொடுத்தாலும் மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லிட்ரோ கேஸ் போன்ற நிறுவனங்கள் எதிர்கொண்டுள்ள அதிக நஷ்டம் காரணமாக டொலர்களைக் கொள்வனவு செய்வதற்கு போதிய இலங்கை ரூபா இல்லாமை பாரிய பிரச்சினையாக உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், முதல் சுற்றில் தொழில்நுட்பப் பிரிவின் பேச்சுவார்த்தைகளின் இறுதிநாள் இன்று எனவும் தெரிவித்தார். இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்து, கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளக்கூடிய 3-4 மாத காலப்பகுதி சவால்மிக்கதாக அமையும் என்றும், இதனை எதிர்கொள்ள முடிந்தளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். அண்மைக்காலத்தில் வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும்போது மதிப்பீடு செய்யப் படும் அரசாங்கத்தின் வருமானம் உண்மை நிலைமைக்கப்பால் நடைமுறைச் சாத்தியமற்ற வகையில் குறிப்பிடப்படுவதால் நாடாளுமன்றம் பிழையாக வழிநடத்தப்படுவதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் சுட்டிக்காட்டினார். இவ்வாறு மதிப்பீடு செய்யப்படும் அரசாங்கத்தின் வருமானத்தை அடிப்படையாகக்கொண்டு அமைச்சுகள் உள்ளிட்ட செலவீனங்களுக்காக அதிக தொகை ஒதுக்கப்படுவது இறுதியில் செலவீனத்தை ஈடுசெய்ய முடியாத அளவுக்கு வரவு-செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகை ஏற்படுவதும், கடன்சுமைக்குள் சிக்குவதும் இந்த நிலைமைக்குக் காரணம் - என்றார்.

அதேநேரம், வருமான வரியை உரிய முறையில் வசூலித்தல், இரத்தினக்கல் கைத்தொழில் உட்பட ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின்போது இடம்பெறும் முறைகேடு களைத் தவிர்ப்பதற்கு நாட்டில் உரிய பொறி முறையொன்றை அறிமுகப்படுத்துவது உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் இதற்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட தொகையைவிட மேலதிகமாக ஒரு ட்ரில்லியன் ரூபாவரை கடனைப் பெறுவது தொடர்பான தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் இக்குழுவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், கலாநிதி நாலக கொடஹேவா, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, அனுப பஸ்குவல், கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோரும், மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### 25.05.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 138 080 | 15 2170 |
| கனேடியன் டொலர் | 163 45 7 | 174 6130 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 6062 | 43 8830 |
| யூரோ | 27 11 0 | 280 16 |
| ஜப்பான் யென் | 1 6678 | 1 7767 |
| சிங்கப்பூர் டொலர் | 146 4463 | 155 475 |
| ஸ்ரேலிங் பவுன் | 330 8882 | 346 3463 |
| சுவிஸ் பிராங்க் | 255 3524 | 27 2646 |
| ஐ.அ.டொலர் | 243 3 2 | 253 2486 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 842 0535 |
| குவைட் | குவைட் தினார் | 0,064 1 7 |
| ஓமான் | ஓமான் றியால் | 822 3220 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 1423 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 84 70 6 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 86 7303 |






பதுளை கத்தோலிக்க மறைமாவட்டத்தின் பசறை புனித யூதா ததேயு பங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 60 பேருக்கு பதுளை மறைமாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய வின்ஸ்டன் பெர்னாண்டோவால் உறுதிபூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. இதன்போது பங்குத்தந்தையர்களான வண.டிலோஷன் ரஜிவ் மற்றும் யேசுபாலன் மற்றும் அருட்கன்னியர்களும் கலந்துகொண்டனர். (படப்பிடிப்பு: (நடராஜா மலர்வேந்தன் )

## மூன்று வாகனங்கள் மோதி பலாங்கொடையில் விபத்து:

### ஒருவர் உயிரிழப்பு ; இருவருக்கு காயம்



சிறிய ரக லொறி ஒன்றும் தனியார் பஸ்ஸும் முச்சக்கரவண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - பதுளை பிரதான வீதியில் பெல்மதுளை பாத்தகட பிரதேசத்தில் நேற்று முன்தினம் (24) இரவு இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இரத்தினபுரி நோக்கிப் பயணித்த சிறிய ரக லொறி அதே திசையில் பயணித்த முச்சக்கர வண்டியை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரே வந்த தனியார் பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

இதனையடுத்து லொறி, முச்சக்கரவண்டியுடன் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் நிக்கவெரட்டிய மீவெல்லேவ பிரதேசத்தில் வசிக்கும் 21 வயதுடையவர் என அடையாளம் காணப்பட் டுள்ளார்.

லொறிச் சாரதியின் கவனக்குறைவு காரணமாகவே இந்தவிபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டியின் பின்னால் பயணித்த பெண் ஒருவரும் குழந்தையும் பலத்த காயங் களுடன் பெல்மதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு இரத்தினபுரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## முல்லைத்தீவில் பதுக்கிவைக்கப்பட்ட மண்ணெண்ணெய் பொலிஸாரால் மீட்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றிலிருந்து பதுக்கிவைக்கப்பட்டிருந்த 900 லீற்றர் மண்ணெண்ணெய் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் அனைத்து வகையான எரிபொருளும் தீர்ந்துள்ளன. இந்நிலையில், ஒருசில எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் அத்தியாவசிய தேவைக்கான எரிபொருள் விநியோகிக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லாத நிலையில், மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக 15 நாட்களுக்கு மேலாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மண்ணெண்ணெய் கொண்டுவரப்படவில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் முள்ளியவளை, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் பதுக்கிவைத்திருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்த நிலையில் நேற்று முன்தினம் (24) மாலை 4.30 மணியளவில் குறித்த இடத்திற்குச் சென்ற விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவு முல்லைத்தீவு மாவட்ட இணைப்பதிகாரி கே.ரி.வசந்தசேகரன் தலைமையிலான அணியினர் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 900 லீற்றர் மண்ணெண்ணெய் பதுக்கிவைக்கப்பட்டிருந்ததை அடையாளம் கண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த 900 லீற்றர் மண்ணெண்ணெயை குறித்த பகுதிக்கு வருகைதந்த மக்களுக்கு குடும்பப் பங்கீட்டு அட்டைக்கு ஏற்றவகையில் ஒவ்வொருவருக்கும் விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

## அத்துகோரளவின் கொலை தொடர்பில் மேலும் நால்வர் பொலிஸாரால் கைது

மறைந்த அமரகீர்த்தி அத்துகோரளவின் கொலை தொடர்பில் மேலும் நால்வர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

மே மாதம் 09ஆம் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர் அதில் கலந்துகொண்டோர் மைனா கோ கம மற்றும் கோட்டா கோ கம ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தினர். அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டோர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையால் நாடு முழுவதும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

நிட்டம்புவவில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# மரக்கறிகளை ஏற்றிச்செல்லும் தோரணையில் 140 லீற்றர் பெற்றோல் பதுளையில் கடத்தல்

(பதுளை நிருபர்)

பதுளைப் பகுதியின் ஊவா – கட்டவளையைச் சேர்ந்த நபரொருவரிடமிருந்து 140 லீற்றர் பெற்றோல் மீட்கப்பட்டதுடன், அந்நபரும் நேற்று (25) ஹாலி-எலைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹாலி-எலை நகரிலிருந்து முச்சக்கரவண்டியில் மரக்கறிகளை ஏற்றிச் செல்லும் தோரணையில், 140 லீற்றர் பெற்றோல் கொள்கலன்களை மரக்கறிகளினால் மறைத்து வைத்து கொண்டு செல்லும்போதே, பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்கு கிடைக்கப்

## சந்தேகநபர் ஒருவர் கைது

பெற்ற தகவலொன்றையடுத்தே, பொலிஸார் குறிப்பிட்ட முச்சக்கரவண்டியை தடுத்து நிறுத்தி, சோதனையிடுகையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெற்றோல் மீட்கப்பட்டது.

நீண்ட காலமாகவிருந்தே, மேற்படி நபர் எரிபொருள்களை இவ்வாறான முறையிலேயே கொண்டு சென்று, கூடிய விலையில் விற்பனை செய்து வந்தமை, ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து, பதுளை பகுதியின் அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கைது செய்யப்பட்ட நபர் விசாரணையின் பின்னர், பதுளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளதாக, ஹாலி-எலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

# நாளுக்குநாள் அதிகரிக்கப்படும் விலைவாசி பெருந்தோட்ட மக்கள் கவலை

(சிவா ஸ்ரீதரராவ்)

நாட்டில் நாளுக்கு நாள் அதிகரிக்கப்பட்டுவரும் பெற்றோல், டீசல் விலை உயர்வால் பஸ் கட்டணங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையிட்டு பெருந்தோட்ட மக்கள் மற்றும் பொது மக்கள் உட்பட நாளாந்தம் தொழிலுக்கு செல்லும் ஊழியர்கள் வரை அனைவரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் தமிழக அரசினால் வழங்கப்பட்டுள்ள நிவாரண உதவிப் பொருட்களை மலையக மக்கள் உட்பட நாட்டில் கஷ்டத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் பாகுபாடின்றி சென்றடைய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவும் அதிகரித்து வருகின்ற அதேவேளை, பஸ் கட்டணங்களும் அதிகரிகரித்து வருகின்றன.

அதுமட்டுமல்லாமல், மருந்து வகைகளின் விலையும் உயர்ந்துள்ளதோடு அதற்கான தட்டுப்பாடும் காணப்படுகின்றது. இதனால் ஏழை மக்களால் தலைதூக்கி வாழமுடியாத நிலைமையே உருவாகியுள்ளது. இன்னும் சில மாதங்களில் மக்கள் பட்டினியாலும் மருந்துகளின்றியும் மரணிக்க நேரிடும் என மக்கள் சுட்டிகாட்டுகின்றனர்.

மக்களின் வாக்குகளை பெற்றுக்கொண்டு அவர்களின் வயிற்றுக்கு அடிக்கும் செயல் திட்டத்தையே இன்றைய அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

பஸ் கட்டணம் அதிகரிப்பால் நாளாந்தம் தொழிலுக்கு செல்வோரின் நிலைமையை நினைக்கும்போது பெரும் கவலையாக உள்ளது. நாளாந்தம் பஸ் வண்டிகளில் தொழிலுக்கு செல்வோர் நாள் ஒன்றுக்கு 500 ரூபா முதல் 1000 ரூபா வரை பஸ் போக்குவரத்திற்கு செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு நாளாந்தம் பஸ்ஸுக்கு செலுத்தும்போது அவர்களின் சம்பளத்தில் மிஞ்சுவதற்கு ஒன்றுமே இல்லை எனவும் மேற்படி ஊழியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர் மழை; எஹலியகொடையில் அதிக மழை வீழ்ச்சி பதிவு

## களுகங்கையில் மீண்டும் வெள்ள அச்சுறுத்தல்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)




இரத்தினபுரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர்மழை காரணமாக களுகங்கையின் நீர் மட்டம் உயர்ந்து தாழ் நிலங்களில் வெள்ள அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் இரத்தினபுரி மாவட்ட காரியாலய அதிகாரி தெரிவித்தார்.

இந்நிலை தொடர்ந்தால் இப்பிரதேசங்களில் வெள்ள அச்சுறுத்தல் ஏற்படலாம் என நீர்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொட பிரதேசத்திற்கு137 மில்லி மீற்றர் மழைபெய்துள்ள தாகவும் மாவட்டத்தின் ஏனைய பல பிரதேசங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்துள்ளதாகவும் இரத்தினபுரி மாவட்ட காரியாலய அதிகாரி தெரிவித்தார்.

இதனால் புளத்சிங்கள, பாலிந்த நுவர பிரதேச செயலகப் பிரிவுகளில் தாழ்நிலங்கள் நேற்று நீரில் மூழ்கின. மோல்காவ, கலவெல்லாகோட, வரக்காகொட வீதிகளும் நீரில் மூழ்கின.

# தலவாக்கலையில் வரிசையின்றி எரிபொருள் கொள்வனவு



(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பல மாத காலமாக எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் வாகனங்கள் காணப்பட்ட போதிலும் நேற்று (25) அவ்வாறானதொரு நிலை அங்கு காணப்படவில்லை.

தலவாக்கலை நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்கள் வரிசையின்றி நுகர்வோர் பெற்றோலை பெற்றுக்கொள்ள முடிந்ததுடன், டீசலை பெறுவதற்கு நீண்ட வரிசையில் வாகனங்களோ மக்களோ நிற்பதை அவதானிக்க முடியவில்லை. எரிபொருள் விலை பாரியளவில் அதிகரித்துள்ளபோதிலும் நீண்ட வரிசையில் காத்திருக்காமல் எரிபொருளை பெற்றுக்கொண்டதாக எரிபொருளைப் பெற வந்த வாகன சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

# கல்வி வளர்ச்சிக்காக சமூக ஆர்வலர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

## அக்குறணை பிரதேச சபைத் தவிசாளர் இஸ்திகார் இமாதுதீன்





(மாத்தளை நிருபர்)

ஒவ்வொரு குழந்தைகளது பூரண ஆரோக்கிய வளர்ச்சிக்கு உகந்த ஒரு சூழலை அமைத்து கொடுப்பது நிலையான கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் எம்மீது இருக்கின்ற ஒரு கட்டாய கடமையாகும். அதற்கான ஓர் சூழலை ஏற்படுத்துவதற்கு இப்பிரதேச அரசியல்வாதிகள் மாத்திரமன்றி கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூக சேவையாளர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும் என அக்குறணை பிரதேச சபைத் தவிசாளர் இஸ்திகார் இமாதுதீன் தெரிவித்தார்.

நூலகப் போட்களில் பங்குபற்றி மாகாண போட்டிகளுக்கு தெரிவான 8 போட்டியாளர்களை பாராட்டும் வைபவம் அக்குறணை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், அக்குறணை பிரதேசசபைக்குட்பட்ட சர்வமதப் பாடசாலைகளில் கல்வி மற்றும் கலாசார வளர்ச்சிக்காக பல மாற்றங்களை ஏற்படுத்திட பலதரப்பட்ட முற்போக்கு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். பாடசாலை கல்வி மற்றும் அதன் செயற்பாடுகள் அதிதிறமையாக செயல்படுத்திட பாடசாலை கல்விக்கப்பால் கலை, இலக்கியம், மொழி மற்றும் தொழில்நுட்பத்துறைகளில் மாணவர்களை வலுவூட்டவும் ஊக்குவிக்கவும் பல முன்னணி செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் அக்குரணை பிரதேச செயலகப் பிரிவில் எமது இந்தத் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்திட பாடசாலை சமூகம் பெரும் பங்காற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களுக்கான பிதிர்க்கடன் திருவடிநிலை தீர்த்தக் கடற்கரையில்







(நெல்லியடி நிருபர்)

முள்ளிவாய்க்காலில் கடந்த 2009ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொதுமக்களுக்கான பிதிர்க்கடன் செய்யும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் சுழிபுரம் திருவடிநிலை தீர்த்தக் கடற்கரையில் இடம்பெற்றது.

மனித உரிமைகளுக்கான கிராமம் அமைப்பின் பணிப்பாளரும், மக்கள் சக்தியின் பட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளருமான முருகவேல் சதாசிவம் தலைமையில் நேற்று மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்களான தவபாலசிங்கம், சுபாஷ் மற்றும் வட்டுக்கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள், யுத்தத்தில் உறவுகளை இழந்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பிதிர்க்கடன்களை தீர்த்தனர். இதில் சிவஸ்ரீ எஸ். நித்தியானந்த குருக்கள், சிவஸ்ரீ எஸ்.கந்தசாமி குருக்கள் ஆகியோர் தலைமையில் பிதிர்க்கடன் நிறைவேற்றப்பட்டது.

# யாழ். செயலரின் தலையீட்டையடுத்து சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம்





(யாழ். நிருபர்)

யாழ். நகரிலுள்ள சமையல் எரிவாயு விநியோக இடத்தில் காத்திருந்த மக்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படாத நிலையில், யாழ். மாவட்ட செயலரின் தலையீட்டினால் அங்கு நின்ற மக்களுக்கு மட்டும் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

நகரிலிருந்து கொட்டடி செல்லும் வீதியிலுள்ள குறித்த மொத்த விநியோக இடத்தில் நேற்று முன்தினம் காலை பொதுமக்கள் காத்திருந்த நிலையில் அங்கு விற்பனை செய்யப்படுவதில்லை எனவும், அருகிலுள்ள விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ளுமாறும் கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து மக்கள் கலைந்து சென்றிருந்தனர். எனினும், விற்பனை நிலையங்களில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இல்லாத நிலையில் மீண்டும் பொதுமக்கள் அப்பகுதியில் கூடியதால் யாழ். மாவட்ட செயலர் விநியோகப் பணிகளை நிறுத்துமாறு கூறியதாக கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கிருந்த ஊடகவியலாளர்கள் சிலர் யாழ். மாவட்ட செயலரின் கவனத்திற்கு விடயத்தை கொண்டுசென்ற நிலையில் அவ்வாறான அறிவித்தல் எதனையும் தான் விடுக்கவில்லை என கூறிய மாவட்ட செயலர் தாம் இதில் தலையிடுவதாக கூறியிருந்தார்.

பின்னர் மாவட்ட செயலரின் தலையீட்டைத் தொடர்ந்து சம்பவ இடத்திலிருந்த பொலிஸார் வெளியிலிருந்து மேலும் பொதுமக்கள் உள்நுழையாதவாறு பாதைகளை பூட்டியபின்னர் காலையிலிருந்து சமையல் எரிவாயுவுக்காக காத்திருந்த மக்களுக்கு மட்டும் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டன.

# 6 வீடுகளில் திருட்டு, கொள்ளை: தம்பதி கைது; 30 பவுண் நகை கைப்பற்றல்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவந்த திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய தம்பதியினர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து சுமார் 30 தங்கப்பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் 6 வீடுகளில் இடம்பெற்ற கொள்ளை மற்றும் திருட்டு தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அவை தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பூம்புகாரைச் சேர்ந்த கணவனும் மனைவியும் கைதுசெய்யப்பட்டனர். கணவன் திருட்டு மற்றும் கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலும் கொள்ளையிட்ட நகைகளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் மனைவியும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களினால் விற்பனை செய்யப்பட்ட 30 தங்கப் பவுண் நகைகள் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகைக் கடைகளில் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவிருந்தனர்.

# 20 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தவசிகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவர் நேற்று முன்தினம் (24) கொடிகாமம் பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தவசிகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் 20 லீற்றர் கசிப்பு, மோட்டார்சைக்கிள் ஆகியவற்றை மீட்டதுடன், 30 வயதான சந்தேக நபர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார்சைக்கிளில் சென்றவர் ரிப்பர் மோதி படுகாயம்



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை முன்பாக ஏ-9வீதியில் நேற்று (25) காலை 11 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஏ-9 வீதியால் பயணித்த ரிப்பர் வாகனம் மோட்டார்சைக்கிளை மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதில் மட்டுவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 57 வயதான சத்தியசீலன் என்பவரே படுகாயமடைந்துள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தாதியர் சத்தியப்பிரமாண நிகழ்வு யாழில்





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய தாதியர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவமும், சத்தியப்பிரமாணம் ஏற்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது.

இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பதிவாளர் வி.காண்டீபன், யாழ்ப்பாண தாதிய பயிற்சிக்கல்லூரி அதிபர் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு தாதியருக்குச் சின்னங்களை அணிவித்தனர்.

# இக்கட்டில் இலங்கை!



இரண்டாண்டு கால கொள்ளை நோய்த் தொற்றுப் பரவலால் சுற்றுலா முடக்கம், செயற்கை உரங்கள் தடை செய்யப்பட்டதால் விவசாய உற்பத்தி வீழ்ச்சி, வரவுக்கு மீறி கடன் வாங்கியதால் பொருளாதாரத் தேக்கம், ஆட்சியாளர்களின் நிர்வாகச் சீர்கேட்டால் நிலையற்ற தன்மை, சீனாவை அதிகப்படியாகச் சார்ந்திருந்ததால் ஏற்பட்ட கடன்சுமை ஆகியவை இலங்கையை நிலைகுலையச் செய்துள்ளன.

இன்றைய திகதியில் இலங்கையில் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ. 5,000. அதற்கும் பல மணிநேரம் காத்திருக்க வேண்டும். பெற்றோல், டீசல் வாங்க கேன்களுடன் 12 மணிநேரத்துக்கு மேல் தெருக்களில் பொதுமக்கள் காத்திருக்கிறார்கள். இந்நிலையில், ''துறைமுகங்களில் காத்திருக்கும் எரிபொருள் டேங்கர்களை இறக்க அந்நிய செலாவணி கையிருப்பு இல்லை'' என்று எரிசக்தித் துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறியிருக்கிறார்.

எரிபொருள் தட்டுப்பாட்டால் நாட்டில் 18 மணிநேர மின்வெட்டு நிலவுகிறது. ஹோட்டல்களும், பாடசாலைகளும்



மூடப்பட்டு விட்டன. அரச அலுவலகங்கள் குறைவான ஊழியர்களுடன் இயங்குகின்றன. அத்தியாவசிய மருந்துகள் இல்லாததால் மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுகள்கூட முடங்கியிருக்கின்றன. இவையெல்லாம் போதாதென்று அரசு மீதான அதிருப்தியில் நாட்டு மக்கள் ஆங்காங்கே நடத்தும் போராட்டங்கள் வன்முறையாக வடிவெடுத்துள்ளன.

தட்டுப்பாடு காரணமாக உணவுப் பொருட்கள், மருந்துகள், எரிபொருட்கள் ஆகியவற்றின் விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. நாட்டின் பணவீக்கம் 30 வீதத்தை தாண்டிவிட்டது. விரைவில் இது 40 வீதத்தை எட்டும் என்று எச்சரிக்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். இவை அனைத்துக்கும் காரணம், வரவுக்கு மீறி வாங்கப்பட்ட கடன்தான்.

உலக வங்கி, சர்வதேச நிதியம் மட்டுமல்லாது சீனா, ஜப்பான் போன்ற நாடுகளிடமிருந்து இலங்கை வாங்கிய கடன் தொகையின் ஒட்டுமொத்த மதிப்பு கடந்த மே 20 நிலைவரப்படி 51 பில்லியன் டொலராக (சுமார் ரூ.3.97 இலட்சம் கோடி) உயர்ந்திருக்கிறது. இந்தக் கடனுக்கான தவணைத் தொகையையோ, வட்டித் தொகையையோ திருப்பித்தரும் நிலையில் இலங்கை இல்லை. இதை சென்ற மாதமே அந்நாட்டு அரசு தெரிவித்துவிட்டது.

குறிப்பாக, உணவுப்பொருட்களுக்காக கடன் பத்திரங்களில் வாங்கிய ரூ. 94,000 கோடி கடனுக்கு உடனே செலுத்த வேண்டிய ரூ. 585 கோடி வட்டியை அளிப்பதற்கான கால அவகாசம் கடந்த மே 18 உடன் முடிவடைந்துவிட்டது. ''பொருளாதார சீர்குலைவு, அந்நிய செலாவணி இன்மை போன்ற நெருக்கடிகளால் வாங்கிய கடனுக்கான வட்டியை திருப்பிச் செலுத்த வாய்ப்பில்லை" என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க மே 20இல் அறிவித்திருக்கிறார்.

இது கிட்டத்தட்ட வங்குரோத்தான நிலைதான்.

இலங்கையின் மொத்தக் கடனில் சுமார் 10 வீதம் சீனாவிடமிருந்து வாங்கியதாகும். தவிர, இலங்கையின் பல உட்கட்டமைப்புத் திட்டங்களில் சீனா பல பில்லியன் டொலரை முதலீடு செய்துள்ளது. குறிப்பாக, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சொந்த ஊரான அம்பந்தோட்டை துறைமுக விரிவாக்கத்தில் நிபுணர்களின் எச்சரிக்கையை மீறி, சீனாவுக்கு ராஜபக்ஷ அளித்த அனுமதி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அங்கு மட்டும் 1.1 பில்லியன் டொலரை (சுமார் ரூ. 8,500 கோடி) சீனா முதலீடு செய்துள்ளது. ஆனால், இத்துறைமுகத்தால் இலங்கை நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லை. தற்போது அதனை சீனாவே 98 ஆண்டு குத்தகைக்கு எடுத்துக்கொண்டிருப்பது, கந்துவட்டிக்காரர்களையே நினைவுபடுத்துகிறது.

கவர்ச்சிகரமான திட்டங்களில் மயங்கியும் அதில் கிடைக்கும் லஞ்சத்துக்காகவும் இலங்கை ஆட்சியாளர்கள் வெளிநாடுகளில் கடன் வாங்கியதன் விளைவை அம்பந்தோட்டை துறைமுக கபளீகரம் காட்டுகிறது. இதேபோல் பல்வேறு திட்டங்களில் சீனாவின் கடன்வலை இலங்கையை இறுகப் பற்றியிருப்பதாக வல்லுநர்கள் கூறுகின்றனர். இன்று இலங்கை பொருளாதார வீழ்ச்சியில் சிக்கித் திணறும்போது, ஏதுமறியாதது போல் சீனா வேடிக்கை பார்க்கிறது. அந்நாட்டுக்கு, இலங்கையில் செய்த முதலீடுகள் குறித்து மட்டும்தான் கவலை.

சர்வதேச நாணய நிதியத்திடம் ரூ. 2.4 இலட்சம் கோடி கடனுதவி பெற இலங்கை அரசு முயன்று வருவதாகத் தெரிகிறது. இந்தளவுக்கு கடனுதவி கிடைக்க வாய்ப்பில்லை என்பது இலங்கைக்கும் தெரியும். ஆனால், இந்தக் கடனை நம்பித்தான் இலங்கையின் எதிர்காலம் இருக்கிறது.

அந்நிய செலாவணிக் கையிருப்பு முற்றிலும் கரைந்துள்ள சூழலில், வரவுக்கு எந்த உத்தரவாதமும் இல்லாத நிலையில் இலங்கை கடைத்தேறுவது கடினம் என்றே தோன்றுகிறது. மேலும் மேலும் கடன் வாங்குவது ஒன்று மட்டுமே இலங்கை முன்னுள்ள உடனடித் தீர்வாகக் காட்சியளிக்கிறது. ''வரக்கூடிய இரண்டு மாதங்கள் இலங்கைக்கு மிக மோசமான காலகட்டமாக இருக்கும்'' என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறியிருப்பது சிக்கலின் தீவிரத்தைக் காட்டுகிறது.

அண்மையில் இலங்கைக்கு ரூ. 1,240 கோடி கடன் வழங்குவதாக உலக வங்கி அறிவித்தது. இது யானைப்பசிக்கு சோளப்பொரி போன்றதுதான். கனடா உள்ளிட்ட ஜி 7 நாடுகள் இலங்கைக்குக் கடனுதவி அளிப்பது குறித்துப் பரிசீலித்து வருகின்றன.

இந்தியா ஏற்கனவே ரூ. 22,500 கோடி உடனடி கடனுதவி அளித்துள்ளது. தவிர, உணவுப் பொருட்கள், அத்தியாவசிய மருந்துகள், எரிபொருட்களை அவசர உதவியாக அளித்து வருகிறது.

பிற நாடுகள் அளிக்கும் கடனுதவிக்கும், நெருங்கிய நட்பு நாடான இந்தியா அளிக்கும் நிதியுதவிக்கும், பொருளுதவிக்கும் உள்ள வேறுபாட்டை இலங்கை உணர்ந்திருக்கும்.

***(தமிழகத்திலிருந்து வெளிவரும் தினமணி பத்திரிகையின் நேற்றைய ஆசிரியர் தலையங்கம் இது)***

# மலையக மக்களுக்கு பாரபட்சமின்றி நிவாரணம் கிடைக்கும் முறை அவசியம்

## அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டுமென வேலுகுமார் எம்.பி. கோரிக்கை



அனைத்து மலையக கட்சிகளும் ஒன்றிணைந்து, மலையக மக்களுக்கு நிவாரண பொருட்கள் மற்றும் உதவிகள் பாரபட்சமின்றி கிடைப்பதற்குரிய முறைமை ஒன்றை முன்வைக்க வேண்டும் என கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தொிவித்துள்ளதாவது,

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலை பஞ்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அனைத்து மட்டத்திலும் உள்ள மக்கள் பாரிய பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாக குறை வருமானம் பெறுபவர்கள் தமது உணவு தேவையை கூட பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இச் சூழ்நிலையில் அரசாங்கம் விசேட நிவாரணங்களை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் இத்தகைய நிவாரணங்களை வழங்கும் போது, மலையக மக்களுக்கு பாராபட்சம் காட்டப்பட்டது. இந்நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு அனைத்து மலையக கட்சிகளும் ஒன்றிணைந்து, மலையக மக்களுக்கு நிவாரண பொருட்கள் மற்றும் உதவிகள் பாரபட்சமின்றி கிடைப்பதற்குரிய முறைமை ஒன்றை முன்வைக்க வேண்டும்.

இந்திய அரசிடம் இருந்தும், குறிப்பாக தமிழ்நாட்டில் இருந்தும், இரண்டு பில்லியன் பெறுமதியான நிவாரண பொருட்கள் கிடைக்க பெற்றிருக்கின்றது. எமது நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைக்கு உதவும் விதமாக தமிழ் நாட்டு அரசே முன்வந்து இந்நிவாறான பொருட்களை பெற்றுத்தந்துள்ளது. இதனைவைத்து, குறுகிய அரசியல் வட்டத்திற்குள் வாத விவாதம் செய்து கொள்வது இந்நேரத்தில் பொருத்தமானது அல்ல.

மக்களுக்கு தெளிவாக தெரியும் நிவாரண பொருட்கள் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பது. மக்கள் எதிர்நோக்கியுள்ள பாரிய பிரச்சினைகளுக்கு மத்தியில் சிறுபிள்ளைத்தனமான அரசியல் செயற்பாடுகள் மக்களுக்கு மேலும் கோபத்தை தூண்டுவதாகவே உள்ளது. சூழ்நிலையை புரிந்து கொண்டு மக்களுக்கான நிவாரணங்கள் பாரபட்சமின்றி கிடைப்பதற்குரிய வழிமுறையை ஏற்படுத்துவதே எமது கடப்பாடாகும். அதற்கான கலந்துரையாடலை மற்றும் செயற்பாடுகளை அரச தரப்போடு நாம் பேசி துரிதமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த காலத்தில் கொவிட் 19 நிவாரண வழங்களில் மலையகம் எங்கும் பாராபட்சம் காட்டப்பட்டது. ரூபா 5 ஆயிரம் கொடுப்பனவில் பாரிய சிக்கல்கள் எழுந்தது. சில பிரதேசங்களில் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் ஓரம்கட்டப்பட்டனர். அத்தோடு ஒரு வீட்டில் அல்லது ஒரு லயன் அறையில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர். அவர்கள் ஒரு அலகிற்குள் இருந்தாலும், தனிப்பட்ட குடும்பங்களாகவே தமது தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர். அவ்வாறான துணை குடும்பங்கள் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டது.

இன்று உயிர் வாழ்வதற்கு மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர். இச்சூழலில் பாரபட்சமின்றி நிவாரணங்கள் கிடைக்கப்பெற வேண்டும். அதற்கு தகுந்த வழிமுறை உருவாக்கப்பட வேண்டும். சமூகத்தில் பல்வேறு தரப்பினர்களையும் ஒன்றிணைத்து, இச் செயற்பாட்டை மேற்கொள்வது பொருத்தமாக அமையும். அதனை நாங்கள் உடனடியாக செய்ய வேண்டி உள்ளது. அதற்கு மாறாக, கட்சி சார்ந்த அரசியல் முன்னெடுப்புகளை மேற்கொள்ள முயற்சித்தால் மக்களின் கோபம் எத்தகைய பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க முடியாது எனத் தொிவித்துள்ளார்.

# கொட்டகலையில் ஐந்து கிராமசேவகர் பிரிவுக்கு கூப்பன் முறையில் எரிவாயு விநியோகம்

## வர்த்தக சங்கக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

கொட்டகலையில் எரிவாயு சிலிண்டர்களை கூப்பன் முறை மூலம் தடையின்றி வழங்குவதற்கு கொட்டகலை வர்த்தக சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.

கொட்டகலை வர்த்தக சங்கத்தின் தலைவர் புஸ்பா விஸ்வநாதன் தலைமையில் நேற்று முன்தினம் (24) நடைபெற்ற கூட்டத்தின்போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய, கொட்டகலையில் ஐந்து கிராமசேவகர் பிரிவுக்கும் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கிராமசேவகர் உறுதிப்படுத்தப்பட்ட முத்திரையோடு கூப்பனொன்று வழங்கப்படும்.

இக்கூப்பனை எரிவாயு விற்பனை முகவரிடம் கொடுக்கும்பட்சத்தில், அவருக்கான அம்மாதத்திற்கான எரிவாயு நிரப்பப்பட்ட சிலிண்டர்கள் கையளிக்கப்படும். இம்முறை மூலம் நீண்டநேரம் வரிசையில் காத்திருக்கத் தேவையில்லை. அனைத்து குடும்பத்திற்கும் மாதாமாதம் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்குமென கொட்டகலை வர்த்தக சங்கத் தலைவர் புஸ்பா விஸ்வநாதன் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் திம்புள்ளை பத்தனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்த ஸ்ரீ உட்பட கொட்டகலை வர்த்தக சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர். மேலும் கொட்டகலைக்கப்பால் மற்றும் வெளியிடங்களைச் சார்ந்தவர்கள் கொட்டகலையில் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்ள முடியாது என இக்கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டது.




**கொலன்னாவ பிறைனி கிட்ஸ் சர்வதேச பாடசாலை மாணவர்களின் ஆக்கத் திறமைகளை மேம்படுத்தும் வகையில் ரெட் மற்றும் யெலோ தின திகழ்வு அண்மையில் பாடசாலையின் அதிபர் திருமதி றிஷானா அக்ரம் தலைமையில் இடம் பெற்றது. (ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

# புளத்சிங்கள, பலிந்தநுவர பகுதிகளில் வெள்ள அபாயம்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெய்துவரும் மழைக்கு மத்தியில் எதிர்வரும் ஆறு மணித்தியால காலப்பகுதிக்குள் பலிந்தநுவர, புளத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவுகளில் வெள்ளம் ஏற்படக்கூடிய நிலை காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதற்கமைவாக புளத்சிங்கள, மொல்காவ வீதி, வரகாகொட, கலவெல்ல வீதி, நாலியத்த- தபல வீதி முதலான வீதிகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலை காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதிகளை பயன்படுத்துவோர் அவதானத்துடன் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

களுகங்கையின் நீர்மட்டம் பல்வேறு பகுதிகளிலும் அதிகரித்துள்ளமை இதற்கான காரணமாகும். களுகங்கையின் பல்வேறு பகுதிகளிலும் தற்சமயம் மழை பெய்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் தாழ்நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# விபசார விடுதி முற்றுகை

**(கெலும் குணதிலக்க)**

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்துவில் வீதியில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது விபசார விடுதியொன்று நேற்றுமுன்தினம் (24) முற்றுகையிடப்பட்டுள்ளது. இதன்போது அங்கிருந்த இரு பெண்களும் முகாமையாளர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் பொருட்டு மொனராகலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.எஸ்.சுமிந்த சஞ்சீவ தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

திகதி 24.05.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4765
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 33,829,158.00
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 9 2 2 7 3 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

கொவிசெத Govisetha
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.05.19 சீட்டிழுப்பு இலக்கம் 3007
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,667,880.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 01 23 30 53
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,458,787.36

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /05 /19
சீட்டிழுப்பு இலக்கம் : 795
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,466,080.00
வெற்றி இலக்கினம் S வெற்றி இலக்கங்கள் 45 53 72 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 111,530,809.60

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0074
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,012,300.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 19.05.2022
இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 02 10 41 50 விசேட இலக்கினம் மீனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,520,667.80


கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1113
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,501,880.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 252,873,082.00
F 07 16 27 60 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# சவளக்கடை பிரதேசத்தில் பெய்த மழை காரணமாக வீடுகள் சேதம்: நெல்மூடைகள் நீரில் மூழ்கி நாசம்

## மக்கள் இருப்பிடத்திலிருந்து வேறு இடங்களில் தஞ்சம்






(ஏ.எச்.எம்.ஹாரீஸ் - மத்திய முகாம்)

நாட்டில் பெய்த கடும் மழை மற்றும் பலத்த காற்று காரணமாக மத்திய முகாம் சவளக்கடை பிரதேசத்தில் பல மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன், வீடுகள், அரிசி ஆலைகள், வணக்கஸ்தலங்கள் உட்பட பல வர்த்தக நிலையங்களும் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் (24) பிற்பகல் 3 மணியளவில் வீசிய பலத்த காற்றுடன் கூடிய மழையின் காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மத்திய முகாம், இரண்டாம் வட்டாரம், மூன்றாம் வட்டாரம், சவளக்கடை நான்காம் கொல்லி ஆகிய பிரதேசங்களிலே இவ்வனர்த்தம் இடம்பெற்றது. வீடுகளின் முன்பு காணப்பட்ட மரங்கள், வீடுகளின் கூரைகளில் வீழ்ந்ததனால் பல வீடுகள் சேதமாக்கப்பட்டதோடு வீட்டிலிருந்த மக்கள் தமது இடத்தைவிட்டு வெளியேறி வேறு இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். மேலும் பல வீதிகளின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.


அன்றையதினம் பெய்த மழையின் காரணமாக அரிசி ஆலைகளில் காணப்பட்ட நெல் மூடைகள் நீரில் மூழ்கி நாசமாகியதாக அரிசி ஆலை உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அரசு கவனத்தில் எடுத்து தகுந்த நட்டஈட்டை பெற்றுத்தருமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பஸ் - கனரக வாகனம் மோதுண்டதில் விபத்து: அறுவர் காயம்; இருவரின் நிலை கவலைக்கிடம்

## தம்பலகாமம் சந்தியில் சம்பவம்



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி - திருகோணமலை பிரதான வீதி தம்பலகாமம் சந்தியை அண்மித்த சுவாமிமலை பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக வாகன விபத்தொன்று நேற்று (25) இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்துச் சம்பவத்தில் அறுவர் காயமடைந்துள்ள நிலையில், இருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் கனரக வாகனமும் மோதியதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றும் களனியை நோக்கிப் பயணித்த கனரக வாகனமுமே இவ்வாறு மோதுண்டதில் இவ்விபத்து சம்பவித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவருகிறது.

சுவாமிமலை பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் குறித்த பஸ் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் பின்னால் வந்த கனரக வாகனம் மோதியதிலேயே இச்சம்பவம் நடந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. சம்பவத்தில் காயமடைந்த அறுவரில் ஐவர் திருகோணமலை பொது வைத்தியசாலையிலும் ஒருவர் கந்தளாய் வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# குடும்பத் தகராறில் 33 வயதானவர் வெட்டிக் கொலை: அக்கரைப்பற்றில் கோடரியுடன் ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

அம்பாறை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள சின்னமுகத்துவாரம் பிரதேசத்தில் அயல்வீட்டாருடன் நீண்டகால குடும்பத் தகராறு காரணமாக பக்கத்துவீட்டு ஆண் ஒருவரை கோடரியால் வெட்டிக் கொலைசெய்த சம்பவ மொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (24) இரவு இடம்பெற்றுள்ளது.

மேலும் இச்சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தையான ஒருவரை கோடரியுடன் கைது செய்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

சின்னமுகத்துவாரம் அக்கரைப்பற்று 9 பிரிவைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 33 வயதுடைய குணரட்ணம் குணதாஸ என்பவரே வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பொத்துவில் பிரதான வீதியில் அருகருகே அமைந்துள்ள இரு குடும்பங்களுக்குள் நீண்டகாலமாக குடும்பத் தகராறு இடம்பெற்று பொலிஸில் முறைப்பாடும் தெரிவித்து நீதிமன்றில் வழக்குகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு 8.15 மணிக்கு பிரதான வீதியில் வைத்து இரு குடும்பங்களுக்குள் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதையடுத்து கோடரியால் பக்கத்து வீட்டுக்காரர் மீது தாக்குதல் நடத்தியதையடுத்து அவர் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற நிலையில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து கோடரியால் தாக்குதல் நடத்திய 36 வயதுடைய ஒருவரை தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கோடரியுடன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பில் மண்ணெண்ணெய் பெற நீண்ட வரிசை



மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்ணெண்ணெய் மற்றும் எரிவாயு இல்லாத காரணத்தினால் மக்கள் தினமும் தமது அன்றாட கடமைகளை நிறைவேற்றுவதில் பெரும் சிக்கல் நிலைகளை எதிர்நோக்குவதாக தெரியவருகின்றது.

மட்டக்களப்பு நகர் உட்பட பல பகுதிகளில் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் அடுப்புகளே பாவிக்கப்பட்டுவரும் நிலையில், எரிவாயு மற்றும் மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்வதில் கடந்த இரண்டு மாதத்திற்கும் மேலாக பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மட்டக்களப்பு திருமலை வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்ட நிலையில், நேற்றுக் காலை தொடக்கம் பிற்பகல் வரையில் கடும் வெயிலையும் பொருட்படுத்தாது பெண்கள் மற்றும் வயோதிபர்கள் என ஆயிரக்கணக்கானோர் நீண்ட வரிசையில் நின்றதை காணமுடிந்தது.

ஒரு கிலோ மீற்றருக்கும் அதிகமான நீண்ட வரிசையில் நின்று மண்ணெண்ணெயை மக்கள் பெற்றுக்கொண்டபோதிலும், பெருமளவானோர் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்லும் நிலையையும் அவதானிக்க முடிந்தது.

# பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படாமை அடிப்படை உரிமையை மீறும் செயல்

## ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பொன். உதயரூபன்



மட்டக்களப்பிலுள்ள சில பாடசாலைகளில் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டை வழங்கப்படாமல் தடுக்கப்பட்டுள்ளதாகவும், இது இலங்கையின் அரசியலமைப்பின் அடிப்படை உரிமையை மீறும் செயற்பாடு எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பொன். உதயரூபன் தெரிவித்தார்.

நாட்டில் பல சிரமங்களுக்கு மத்தியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நடைபெற்றுவருகின்றது. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மாணவர்கள் பரீட்சையை சவாலாக எடுத்து தோற்றியுள்ளனர்.

கடந்த காலத்தில் கற்றல் செயற்பாடுகளில் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்ட நிலையிலும் போக்குவரத்து பிரச்சினைகள் உட்பட பல்வேறு நெருக்கடிகளை மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள நிலையிலும் மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள சில பாடசாலைகளில் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படாமை இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் கருதுகின்றது. இது தொடர்பில் வன்மையான கண்டனத்தினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாணவர்களுக்கு கட்டாயக்கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இக்காலத்தில் மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையாவிட்டாலும் தொழில்நுட்ப ரீதியான விசேட செயற்திட்டங்கள் கல்விக் கொள்கையில் உள்ளன. இவ்வாறான நிலையில் இதற்கான முழுப்பொறுப்பினையும் மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# காரைதீவில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு



(நிந்தவூர் நிருபர்)

காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் காரைதீவு பிரதேச சபை உறுப்பினருமான லயன் எஸ்.நேசராசாவினால் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தின் தலைமைக் காரியாலயத்தில் விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் கே.உமாரமணன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ராமகிருஷ்ணமிஷன் ஆண்கள் பாடசாலையின் அதிபர் ரீ.யோகநாதன் பிரதம அதிதியாகவும் விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களான வேற்குமரன் மற்றும் ஜெயகோபன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் கழகத்தின் தலைவர் லயன் எஸ்.நேசராசாவினால் தனது சொந்த நிதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# அம்பாறை மாவட்ட விவசாயிகளின் வயல் நிலங்கள் காட்டு விலங்குகளினால் சேதம்

(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கைக்காக தமது வயல் நிலங்களை தயார்செய்யும் விவசாயிகள் கட்டாக்காலி மாடுகளினாலும் காட்டு யானைகளின் தொல்லையினாலும் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

விவசாயிகள் சுட்டெரிக்கும் வெயிலிலும் பகல் முழுவதும் வயலில் தயார்படுத்தி வைத்திருக்கும் வரம்புகளை மாலை வேளைகளில் மேய்ச்சலுக்காக வரும் கட்டாக்காலி மாடுகளும் இரவு வேளைகளில் நீர் தேடி வரும் காட்டு யானைகளும் சேதப்படுத்திச் செல்கின்றன. இதனால் மறுநாள் மீண்டும் வரம்புகளை அமைக்கும் நிலைமையும் அதற்காக வீணான பணம் செலவழிக்கவேண்டியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இவ்விடயமாக விவசாயத் திணைக்கள அதிகாரிகளுக்கு பலமுறை தெரிவித்தும் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் ஆகிவிட்டதாக விவசாயிகள் மேலும் தங்கள் ஆதங்கத்தை தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(காரைதீவு நிருபர்)

அகில இலங்கை சமாதான நீதவானாக நிந்தவூரைச் சேர்ந்த ஆதம்பாவா முகமட் றியாழ் சத்தியப்’பிரமாணம் செய்துகொண்டார். இவர் அல்ஹாஜ் எ.எல்.ஆதம்பாவா- ஹாஜியானி செயின் சக்கினா ஆகியோரின் புதல்வராவார்.

நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலையின் பழைய மாணவரான இவர், நிந்தவூர் ரிதம் கலை மன்றத்தின் தலைவராகவும் மௌலானா சர்வதேச சுற்றுலா நிறுவனத்தின் கிளை முகாமையாளராகவும் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் தரத்துக்கான மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசால் நிர்மாணிக்கப்பட்ட கல்முனை கிரீன்பீல்ட் பிரதேசத்தில் அமைந்துள்ள கல்முனை கிரீன்பீல்ட் கமு/கமு/றோயல் வித்தியாலயத்தில் தரம்-1 மாணவர்களை வரவேற்கும் ‘வித்தியாரம்ப’ நிகழ்வு அண்மையில் பாடசாலையின் அதிபர் எம்.எச்.எம்.அன்ஸார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் இஸட்.ஏ.எம்.அஸ்மீர் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், மேலும் சிறப்பு அதிதியாக கல்முனை கோட்டக்கல்வி அதிகாரி வீ.எம்.ஸம்ஸம், அதிதிகளாக ஆசிரிய ஆலோசகர்களான எம்.கே.எம்.தாஸிம், ஏ.ராஸிக், பாடசாலை பிரதி அதிபர் எம்.எம்.எம்.இப்றாஹிம் ஆகியோருடன் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# சுகாதாரப் பரிசோதகர்களுக்கான பயிற்சிப் பட்டறை




(மட்டக்களப்பு நிருபர்)

புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகாரசபையானது கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு பயிற்சிப் பட்டறையொன்றை மட்டக்களப்பில் அண்மையில் நடத்தியிருந்தது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பிரதான மண்டபத்தில் புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகாரசபையின் தலைவர் வைத்திய கலாநிதி சமதி ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற குறித்த பயிற்சிப் பட்டறையின்போது புகையிலையற்ற 362 வலயங்கள் உருவாக்கப்படவுள்ளமை தொடர்பாக விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாணத்திலுள்ள நான்கு பிராந்திய சுகாதாரப் பணிமனைகளிலிருந்து 100 சுகாதாரப் பரிசோதகர்கள் வரையானோர் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சிப் பட்டறையில் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மோகனகுமார், மாகாண தொற்றுநோய் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.அருள்குமரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சீனத்தூதுவர் ஸி ஸென்ஹொங் கிழக்கு மாகாண ஆளுநர் சந்திப்பு



(கிண்ணியா நிருபர்)

சீன மக்கள் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் ஸி ஸென்ஹொங் (QI Zenhong) நேற்று முன்தினம் (24) காலை திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை சந்தித்தார்.

அண்மையில் கொழும்பில் ஆளுநருக்கும் சீனத் தூதுவருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது ஆளுநரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய கிழக்கு மாகாணத்திற்கான விஜயத்தையும் அவர் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது ஆளுநர் அலுவலகத்திற்கு வந்த சீனத் தூதுவருக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் நீண்டகால நட்புறவு காணப்படுவதாகவும் இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சீனா தனது ஆதரவை இலங்கைக்கு வழங்கும் எனவும் தூதுவர் தெரிவித்தார்.

சீன அரசாங்கத்தினால் கிழக்கு மாகாணத்திற்கு வழங்கப்பட்ட 10,000 உலருணவுப் பொதிகளை கிழக்கு மாகாண ஆளுநரும் சீனத் தூதுவரும் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு இதன்போது வழங்கினர்.

கிழக்கு மாகாணம் இயற்கை வளங்கள் நிறைந்த பிரதேசம் எனவும் சுற்றுலாத்துறையை அபிவிருத்திசெய்வதற்கு பல வாய்ப்புகள் காணப்படுவதாகவும் இதன்போது கிழக்கு



மாகாண ஆளுநர் தூதுவரிடம் எடுத்துரைத்தார்.

பின்னர் கிழக்கு மாகாணத்தில் புதிய முதலீடுகள் மூலம் அபிவிருத்தி செய்யக்கூடிய வளங்கள் குறித்து சீனத் தூதுவர் மற்றும் அவரது குழுவினருக்கு விளக்கமளித்தார். மேலும் புதிய முதலீடுகளை மேற்கொள்ளக்கூடியதுமான மாகாணத்தின் வளங்கள் தொடர்பான விசேட கையேட்டை தூதுவரிடம் ஆளுநர் வழங்கினார்.

இதில் திருகோணமலை மாவட்ட செயலாளர் டபிள்யூ.எச்.என்.ஜயவிக்ரம மாகாண பிரதம செயலாளர் துசித பி வணிகசிங்க, ஆளுநரின் செயலாளர் மதநாயக்க உட்பட பல உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# 50 ஆயிரம் தமிழக நிவாரணப் பொதிகள் மட்டக்களப்புக்கு

## மாவட்ட அரசாங்க அதிபர் கருணாகரன்

(கனகராசா சரவணன்)

இந்தியாவின் தமிழ்நாட்டு அரசால் வழங்கப்பட்டுள்ள உணவுப் பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு முதற்கட்டமாக 50 ஆயிரம் பொதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் நேற்றுமுன்தினம்(24) தெரிவித்தார்.

இந்திய நிவாரணப் பொதிகள் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனை தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் தமிழ்நாட்டு அரசால் இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணப் பொருட்கள் இலங்கையில் வறுமையில் வாடும் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர்களை இணையவழியில் சந்திப்பு நடத்திய உயர் அதிகாரிகள் மாவட்டத்தில் வறுமையிலுள்ள மக்களின் புள்ளிவிபரங்கள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டுள்ளதுடன், மாவட்டத்திற்கான உலருணவுப் பொதிகளின் எண்ணிக்கையை கேட்டறிந்து அனைவருக்கும் வழங்கவேண்டும் என்பதே அரசாங்கத்தின் திட்டமாகவும் உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தமாக 84 ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன. இதில் முதற்கட்டமாக தலா 10 கிலோ நிறை கொண்ட 50 ஆயிரம் நிவாரணப் பொதிகள் கிடைக்கவுள்ளதுடன், அதனை வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பம் ஒன்றுக்கு தலா ஒரு பொதி வீதம் வழங்கவுள்ளதுடன், அதன்பின்னர் வரும் நிவாரணப் பொதிகளை ஏனையோருக்கு வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# போடியார் புலம்பல்!



*பிள்ளையான் வேட்டிய மடிச்சிக் கட்டினால் தமிழனின் வீரம் தெரியுமாம் எண்டு அவரிட ஊதுகுழல் TMVP செயலாளர் பிரசாந்தன் தம்பி துள்ளிக்குதிக்கிறாரு எலுவா?*

*சரிடாம்பி 2004 தொடக்கம் 2010 வரை றவுசர மடிக்காமலா கொழும்பில இருந்து பீடாதிபதி ரவிந்திரநாத் தொடக்கம் TRO பிறேமினி உட்பட ஏழு பேர், மறுகா ஜோசப் எம்.பி. எல்லாருக்கும் வீரம் காட்டினதோ அப்ப ஒட்டுக்குழு வீரம், இப்ப தமிழ் வீரமடா..*

*போங்கடா வேட்டி கட்டினா மட்டும் தமிழனாக மாற ஏலாது. செயலிலதாண்டா தமிழன். நீங்க எல்லாப்பேரும் பெயர் மட்டும் தமிழன். மற்றெல்லாம் நடிப்பு எலுவா!*

# மட்டக்களப்பு மாநகர எல்லைக்குட்பட்ட மயானங்கள் துப்புரவு செய்யும் பணி



(கல்லடி நிருபர்)

மீளாத்துயில் கொள்ளும் உறவுகளின் இல்லங்களைப் பராமரிப்போம் எனும் தொனிப்பொருளுக்கமைய மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட மயானங்களைத் துப்புரவுசெய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் பெரிய ஊறணி மயானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை துப்புரவு செய்யப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையால் வாராந்த செயற்றிட்டத்திற்கமைவாக இருதயபுரம் வட்டார உறுப்பினர் விஜயகுமார் பூபாலராஜாவின் வேண்டுகோளுக்கிணங்க குறித்த மயானம் மாநகர சபையின் சுகாதார ஊழியர்களால் துப்புரவு செய்யப்பட்டது.

இதன்போது பொதுமக்களால் மயானத்திற்குள் வீசப்பட்டு முகாமைத்துவமின்றிக் காணப்பட்ட கழிவுகள் அகற்றப்பட்டதோடு கனரக வாகனத்தைப் பயன்படுத்தி காடாகக் காணப்பட்ட தேவையற்ற மரம், செடி, கொடிகள் அகற்றப்பட்டன.

இதேவேளை, அமிர்தகழி வட்டார உறுப்பினர் தம்பிராசா இராஜேந்திரனின் முன்மொழிவுக்கமைய அமிர்தகழி விக்னேஸ்வரர் ஆலய வளாகமும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, மாநகர சபையின் சுகாதார நிலையியற் குழுவின் தலைவர் க.ரகுநாதன், மாநகர சபை உறுப்பினர் சிவம் பாக்கியநாதன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் கிறிஸ்டி மற்றும் பிரதேச மேற்பார்வையாளர் ரி.உதயபாலன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சைக்கிளில் கடமையில் ஈடுபடும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்

(கல்லடி நிருபர்)

எரிபொருள் விலையேற்றம் மற்றும் எரிபொருள் இன்மை போன்ற பிரச்சினைகளினால் மக்களுக்கு அத்தியாவசியமாக சேவையாற்றும் மட்டக்களப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று (25) முதல் சைக்கிளில் சென்று தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடமை நேரத்திற்கு மேலதிக நேரம் பணி புரியும் இவர்களுக்குமான மேலதிக கொடுப்பனவையும் அரசாங்கம் நிறுத்தியுள்ளதுடன் இதனால் முழு நேரமும் மக்கள் நலனுக்காக சேவையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், மக்களுக்கான சேவையை தொடர்ந்து முன்னெடுப்பதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் சுகாதாரப் பரிசோதகர்கள்



நேற்று முதல் தமது கடமைகளுக்கு சைக்கிளில் செல்கின்றனர்.

கொரோனா தொற்று தற்போது நாட்டில் குறைவடைந்துவரும் அதேவேளை, டெங்கு நோயின் தாக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வாழைச்சேனையில் டெங்கு தொடர்பான வேலைத்திட்டங்கள்







(வாழைச்சேனை நிருபர்)

நாட்டில் பெய்துவரும் மழையுடனான காலநிலை காரணமாக டெங்கு தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது. இந்நிலையில் பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி டெங்கு தொடர்பாக பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் வாழைச்சேனை விநாயகபுரம் கிராம சேவையாளர் காரியாலய வளாகம் துப்புரவு செய்யப்பட்டது.

கிராம சேவை உத்தியோகத்தர் க.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற சிரமதானத்தில் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யசோதரன், கல்குடா பொலிஸார், சமுர்த்தி உத்தியோகத்தர், விநாயகபுரம் வின்னிங் ஸ்டார் இளைஞர் கழகத்தினர், வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர், சமுர்த்தி பயனாளிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு பரவல் தற்போது அதிகரித்துக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையிலிருந்து அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 57 பேர் விளக்கமறியலில்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை சல்லி பிரதேசத்திலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்ட 57 பேரை எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதவான் நேற்றுமுன்தினம் (24) உத்தரவிட்டார்.

சாம்பல்தீவு சல்லி பிரதேசத்திலிருந்து வெளிநாடு ஒன்றுக்கு சட்டவிரோதமாக செல்ல முற்பட்ட 67 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம், அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் கொழும்பு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

திருகோணமலை சல்லி பகுதியிலிருந்து கடந்த திங்கட்கிழமை 23ஆம் திகதி இரவு சட்டவிரோதமான முறையில் படகொன்றில் சென்றபோதே கடற்படையினரால் கைது செய்யப்பட்டு திருகோணமலை தலைமையகப் பொலிஸில் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது குறித்த பயணத்துக்காக பயன்படுத்தப்பட்ட 3 முச்சக்கரவண்டிகள், ஒரு கெப் வாகனம், வேன் ஒன்று என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே சிறுவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பத்துப் பேருக்கு பிணை வழங்கி 57 பேரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# புல்லின் பூவிலிருந்து வெளியாகும் துகள்களினால் மாளிகைக்காடு பிரதேச மக்களுக்கு அசௌகரியம்



(நிந்தவூர் நிருபர்)

காரைதீவு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மாளிகைக்காடு நீரேரியில் வளர்ந்துள்ள ஒரு வகைப் புல்லின் பூவிலிருந்து வெளியாகும் சிறு துகள்கள் இப்பிரதேசத்திலுள்ள பொதுமக்களின் சுகாதாரத்திற்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது.

கடந்த பல வருட காலமாக குறிப்பிட்ட நீரேரியில் வளர்ந்துள்ள இப்புல் பற்றைக்காடாக காணப்படுவதால் தோணாவினூடாக செல்லும் வெள்ளநீர் பாலத்தினூடாக வடிந்து செல்ல விடாமல் தடைசெய்கின்றது. இதனால் அருகிலுள்ள பிரதேசம் மழைக் காலங்களில் வெள்ளக்காடாக காட்சியளிக்கும்.

இப்புல் காட்டுக்குள் விஷ ஜந்துக்கள், நோய்களை பரப்பக்கூடிய நுளம்புகள் அதிகமாக பெருகிக் காணப்படுகின்றன.

மாளிகைக்காடு பாலத்திற்கு அண்மையில் அல்-ஹுசைன் வித்தியாலயம் அமைந்திருப்பதால் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் நாளாந்தம் பல சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

கடுமையான காற்று வீசும்போது புல்லின் பூவிலிருந்து வெளியாகும் துகள்கள் காற்றில் எடுத்துச்செல்லப்பட்டு உடம்பில் படும்போது ஒருவகைத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துமாறு பிரதேசவாசிகள் கேட்டுள்ளனர்.

# சமூக மாற்றத்திற்கு ஊடகவியலாளர்கள் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது

## தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர்





(பெரியநீலாவணை நிருபர்)

சமூகத்தில் ஏற்படுகின்ற ஆரோக்கியமான மாற்றத்திற்கு ஊடகவியலாளர்கள் ஆற்றிவருகின்ற பங்கு அளப்பரியதாகும் - என்று இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2017/2018 கல்வியாண்டில் டிப்ளோமா பட்டத்தை பூர்த்திசெய்த மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வு நேற்று முன்தினம் 24ஆம் திகதி ஒலுவில் பறன் தோட்டத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே உபவேந்தர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

தகவல் பரிமாற்ற உலகில் ஊடகத்துறையின் வகிபங்கு பெறுமதியானதாகும். இன்றைய பல்லின அரசியல், சமூக, கலாசார, பண்பாட்டு சூழலில் ஊடகத்துறை மற்றும் ஊடகவியலாளர்களின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. அதேபோன்று ஊடகவியலாளர்களின் பணிகளை செம்மைப்படுத்துவதற்கு இதுபோன்ற கற்கை நெறிகள் முக்கியமானதாகும்.

சமூக நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் வினைத்திறனான சேவைக்கும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆற்றுகின்ற பணி மெச்சத்தக்கதாகும். ஊடகவியலாளர்களை மக்கள் நம்புகிறார்கள். எனவே, அதற்கேற்றாற்போல் உண்மைத்தன்மையான செய்திகளை வெளியில் கொண்டுவருவதற்கு ஊடகங்கள் இன்னும் பணியாற்ற வேண்டியுள்ளது. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா கற்கைநெறியை பட்டப்படிப்பாக முன்கொண்டு செல்வதற்கு எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

எமது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தொகுதி மாணவர்களாக பட்டத்தை பூர்த்திசெய்துள்ள இந்த மாணவர்களின் விழாவை மிகவும் பிரம்மாண்டமான முறையில் அடுத்த மாதம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கைநெறியின் இணைப்பாளர் சிரேஷ்ட பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா, கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.எம்.ஐயூப், வெளிவாரி கற்கை நிலைய உதவிப் பதிவாளர் எஸ்.சிவகுமார், வெளிவாரி கற்கை நிலைய உத்தியோகத்தர் எஸ்.எம்.சதாம் ஹுசைன் உட்பட டிப்ளோமா பட்டத்தை பூர்த்தி செய்துகொண்ட மாணவர்களும் கலந்துகொண்டனர்.

# மெண்டிஸ் நிறுவனம் ஒரே சொத்தை இருவேறு வங்கிகளில் அடமானம் வைத்ததா?

## ஏழு பில்லியன் ரூபா பரிமாற்றம் தொடர்பில் கோப் குழு அவதானம்



வரையறுக்கப்பட்ட டபிள்யு. எம். மெண்டிஸ் மற்றும் நிறுவனம் ஒரே சொத்தை இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளதா என்பது தொடர்பில் கோப் குழுவில் அவதானம் செலுத்தப்பட்டது.

இலங்கை வங்கியின் 2018 மற்றும் 2019 நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் ஆராயும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் நேற்றுமுன்தினம் (24) நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தின்போதே இதுபற்றி கலந்துரையாடப்பட்டது.

கடந்த ஐந்தாண்டுகளில் அதிக செயற்படாத கடன்களைக்கொண்ட சில நிறுவனங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், இதன்போது வரையறுக்கப்பட்ட டபிள்யு. எம். நிறுவனம் தொடர்பில் இவ்வாறு அவதானம் செலுத்தப்பட்டது. அதற்கமைய வரையறுக்கப்பட்ட டபிள்யூ. எம். மெண்டிஸ் நிறுவனம் 2021ஆம் ஆண்டுவரை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன்களுக்கு அடமானம் வைத்துள்ள சொத்துகள் தொடர்பில் வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை வங்கி அதிகாரிகளிடம் வினவினர்.

இதன்போது அதிகாரிகள் குறித்த சொத்துகள் தொடர்பில் தெரிவிக்கும்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் எஸ்.எம்.மரிக்கார் ஆகியோர் அண்மையில் மக்கள் வங்கி கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டபோது இந்த நிறுவனம் குறித்த சொத்தை அடமானம் வைத்து மக்கள் வங்கியிலும் கடன் பெற்றுள்ளதாக மக்கள் வங்கி அதிகாரிகள் தெரிவித்ததாக குறிப்பிட்டனர்.

ஒரே சொத்தை அடமானம் வைத்து இந்த இரண்டு வங்கிகளிலிருந்தும் சுமார் 7 பில்லியன் ரூபா கடன் பெற்றுள்ளதாக தெரிவித்தனர். இதனால், இது தொடர்பில் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பான நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் தொடர்பில் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியதுடன், இதுபோன்ற கடுமையான விடயங்கள் தொடர்பில் கூடிய அவதானம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். அதற்கமைய, எதிர்காலத்தில் உரிய இரண்டு வங்கிகளையும் குழுவுக்கு அழைத்து இது தொடர்பில் அறிக்கை ஒன்றைத் தயாரித்து அந்த அறிக்கை மூலம் இந்த விடயங்கள் தொடர்பில் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க எதிர்பார்ப்பதாக கோப் குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று, 2020இல் பணிப்பளார் சபை தீர்மானத்துக்கமைய வங்கியினால் ஆரம்ப முதிர்வு ஓய்வுதிய நலனாக முன்னாள் பொது முகாமையாளருக்கு செலுத்தப்பட்ட சர்ச்சைக்குரிய 3,20,39,733 ரூபா நிதி தொடர்பில் கோப் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

இந்த முகாமையாளர் ஆரம்ப முதிர்வு ஓய்வுதியம் செல்ல நடவடிக்கை எடுக்கும் போது தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தம் மேற்கொண்டதாகவும், இதனால் ஒரு நாளைக்கு 75 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாகவும் இலங்கை வங்கியின் தலைவர் இதன்போது குறிப்பிட்டார். இதனால் அந்த வேலை நிறுத்தத்தை விரைவாக நிறைவுசெய்வதற்கு இந்தத் தீர்மானம் எடுக்கவேண்டி ஏற்பட்டதாக தெரிவித்தார். எனினும், இது தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரை அறிவுறுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார். வங்கிக்கு ஒரு நாளில் ஏற்பட்ட நட்டம் பல நாட்கள் இடம்பெறக்கூடும் என்பதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை வங்கியின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், அரசுக்கு சொந்தமான முயற்சியாண்மைகளின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த பற்றாக்குறை தொடர்பில் கோப் குழுவில் கலந்துரையாடப்பட்டது. கடன்களை மீளப்பெற இயலாத அரசாங்க முயற்சியாண்மைகளுக்கு கடன் வழங்குவது பொருத்தமில்லை என இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுகள் மாற்று சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் இலங்கை வங்கிக்கு காணப்படும் இயலுமை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

கணக்கிடப்படாத ஏனைய துறைகளையும் சேர்த்து நிலைமை அறிக்கையொன்றை ஒரு மாத காலத்துக்குள் வழங்குமாறு கோப் குழுவின் தலைவர் (பேராசிரியர்) சரித ஹேரத் பரிந்துரை வழங்கியதுடன், நாட்டின் பிரதான வங்கியாக இலங்கை வங்கி எடுக்கும் சரியான தீர்மானங்களை பாராட்டுவதாகவும், பிழையான விடயங்கள் காணப்பட்டால் அவற்றை திருத்திக்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அழுத்கமே, ரவுப் ஹக்கீம், பாட்டலி சம்பிக்க ரணவக்க, எரான் விக்ரமரத்ன, ஹர்ஷ டி சில்வா, கலாநிதி சரத் வீரசேகர, ஜகத் புஷ்பகுமார, கலாநிதி நாலக கொடஹேவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மக்களின் தவறான நடத்தையால் 40 எரிபொருள் நிலையங்கள் மூடல்

### பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவிப்பு

பல்வேறு குழுக்களின் எதிர்ப்பு மற்றும் கட்டுக்கடங்காத நடத்தை காரணமாக நாட்டில் மொத்தம் 40 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் பெறுவதற்காக எரிபொருள் நிரப்பும் நிலைய ஊழியர்களை சிலர் மிரட்டியதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக சங்கத்தின் இணைச் செயலாளர் கபில நாவோதுன்ன தெரிவித்தார்.

அதன்படி இந்த நிரப்பு நிலையங்களுக்கான அனைத்து எரிபொருள் விண்ணப்பங்களும் இரத்துசெய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இவ்வாறான மிரட்டல் மற்றும் கட்டுக்கடங்காத நடத்தைகள் தோன்றியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் மீது ஐந்து தாக்குதல் சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக நாவோதுன்ன மேலும் தெரிவித்தார்.

எரிபொருள் விநியோகம் சீராக நடைபெற பொதுமக்கள் ஆதரவு அளிக்காவிட்டால், மூடப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை எதிர்வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## புதுமணத் தம்பதிகள் பயணித்த கார் விபத்து: மிஹிந்தலையில் சம்பவம்; நால்வருக்கு காயம்!

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

புதிதாக திருமணம் முடித்த தம்பதிகள் பயணித்த சொகுசு கார் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் மணமகன் உட்பட நால்வர் காயமடைந்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை மாலை அநுராதபுரம் - மிஹிந்தலை பிரதான வீதியின் குருந்தங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் காயமடைந்தவர்கள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். புதிய திருமணத் தம்பதிகள் அநுராதபுரம் விமான நிலைய வீதியை வசிப்பிடமாகக்கொண்டவர்களாவர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

மிஹிந்தலை பகுதியிலிருந்து அநுராதபுரம் பகுதிக்கு பயணித்துக்கொண்டிருந்த புதிய திருமணத் தம்பதிகளின் கார் வீதியை விட்டு விலகி எதிர்த்திசையில் வந்துகொண்டிருந்த முச்சக்கரவண்டியொன்றுடனும் இரண்டு மோட்டார்சைக்கிள்களுடனும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹெரோயினுடன் பெண் கைது

**(கெலும் குணதிலக்க)**

புத்தல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உனவட்டுன பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 45 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் (24) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண் 50 வயதானவர் என்றும் போதைப்பொருள் விற்பனையில் நீண்டகாலம் ஈடுபட்டு வந்தவரென்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் காரணமாக அந்தப் பெண்ணிடம் நீண்டநேரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. போதைப்பொருள் பாவனை, விற்பனை தொடர்பில் இந்தப் பெண்ணுடன் தொடர்பில் உள்ளவர்கள் குறித்து புத்தல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. எம்.ஜே.பண்டார தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண்ணொருவர் கொலை

### வண்ணாத்திவில்லுவில் சம்பவம்

**வண்ணாத்திவில்லு, மங்களபுர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நேற்று முன்தினம் (24) கொலைசெய்யப்பட்டுள்ளார்.**

**உயிரிழந்தவர் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.**

**திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவு குறித்து ஏற்பட்ட முரண்பாடொன்றின் காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.**

**இந்நிலையில், சந்தேகநபரை கைது செய்துள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.**

## எரிபொருள் இன்மையால் புத்தளம் மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நெருக்கடி நிலை

### உரிய நடவடிக்கை அவசியமென நீண்டநாள் படகு உரிமையாளர்கள் சங்கம் அவசர கோரிக்கை

**(ஜூட் சமந்த)**

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக புத்தளத்தில் நீண்டநாள் படகுகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர் நிர்க்கதியான நிலைமைக்கு உள்ளாகியுள்ளனர். மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருள் விநியோகிக்கப்படுவதால் அவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாதுள்ளதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நீண்டநாள் படகுகளில் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாததால் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக நீண்டநாள் படகு உரிமையாளர் சங்கத்தின் தலைவர் டிரோன் மெண்டிஸ் தெரிவித்தார்.

வென்னப்புவவில் நேற்று (25) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு





கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நீண்டநாள் மீன்பிடி படகுகள் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சர்வதேச கடற்பரப்புக்குச் சென்று மீண்டும் வர 45 நாட்கள் கடக்கின்றன. அதற்கமைய, ஒரு பயணத்துக்காக 11 ஆயிரம் லீற்றர் டீசல் பயன்படுத்தப்படுகிறது.

நாளொன்றுக்கு ஒரு முறை 33 ஆயிரம் லீற்றருக்கும் அதிகளவான டீசல் கடந்த காலங்களில் விநியோகிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் தற்போது 10 லீற்றர் டீசலை பெற்றுக்கொள்வதிலும் சிரமம் இருக்கிறது. ஏனென்றால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோக நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

துறைமுகத்தில் தரித்து வைக்கப்படும் ஒவ்வொரு நாளுக்காகவும், கட்டணம், படகு செலுத்துனர்களுக்கு கொடுப்பனவுகளை செலுத்தவும், வருமானமின்றி தரித்து வைக்கப்பட்டுள்ள படகுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையை முறையாக செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும். கடற்றொழிலை மாத்திரம் நம்பியிருக்கும் மீனவர்கள் நெருக்கடியான நிலைமையை எதிர்நோக்கியிருக்கிறார்கள். அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது - எனத் தெரிவித்தார்.



புத்தளம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் பெய்த அடைமழை காரணமாக சில பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் பரீட்சையில் தோற்றுவதில் சிரமங்களை எதிர்நோக்கினர். இதன் காரணமாக பரீட்சைக்கான ஒழுங்குகளை கடும் மழையிலும் இராணுவத்தினர் மேற்கொண்டதை படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: ஜூட் சமந்த)

# மாவட்டத்தின் பெயரை மாற்றியமைக்கு எதிர்ப்பு: கலவர பூமியானது ஆந்திரா; 144 தடை அமுல்

## அமைச்சர் அலுவலகத்துக்கு தீ: வாகனங்கள் மீது கல்வீச்சு, பொலிஸ் தடியடி; கைதுசெய்து அழைத்துச் சென்ற பஸ் எரிப்பு






ஆந்திராவில் கோணசீமா மாவட்டத்தின் பெயரை மாற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைச்சர் வீட்டு முன் போராட்டம் நடத்தப்பட்டது. அப்போது ஏற்பட்ட வன்முறையாக வெடித்த நிலையில் அமைச்சர் ஒருவரின் வீடு தீ வைத்து எரிக்கப்பட்டது. இதனால் அங்கு 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆந்திராவிலிருந்த 13 மாவட்டங்களை பிரித்து கூடுதலாக 13 புதிய மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதில், கிழக்கு கோதாவரி மாவட்டத்திலிருந்த அமலாபுரத்தை மாவட்ட தலைநகராக வைத்து கோணசீமா மாவட்டம் உருவாக்கப்பட்டது. இந்த மாவட்டத்தின் பெயரை 'டொக்டர் பி.ஆர்.அம்பேத்கர் கோணசீமா மாவட்டம் என அரசு முடிவுசெய்து அறிவித்தது. இதற்கு, அப்போது பலர் ஆதரவு தெரிவித்த நிலையில் பெயர் வைக்கப்பட்ட பின்னர் கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

அம்பேத்கர் கோணசீமா மாவட்டம் பெயரை நீக்கிவிட்டு மீண்டும் கோணசீமா மாவட்டம் என்ற பெயரே தொடர வேண்டும் என பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த கூட்டு நடவடிக்கை குழுவினர் நேற்றுமுன்தினம் பேரணியொன்றை முன்னெடுத்ததுடன், வீதி மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

அங்கு ஏற்கனவே கூட்டங்கள் அல்லது பேரணிகளைத் தடுக்க 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. போராட்டக்காரர்களின் பேரணியை பொலிஸார் தடுத்ததால் பதற்றம் ஏற்பட்டது. இதனால், போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். அதேநேரத்தில் சிலர் எஸ்பி வாகனம் மற்றும் பஸ்கள் மீது கற்களை வீசினர். இந்தச் சம்பவத்தில் எஸ்பியின் துப்பாக்கியேந்திய பாதுகாவலர் காயமடைந்தார். பல வாகனங்களின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. நிலைமை கை மீறியதால் மாவட்ட எஸ்பி சுப்பா தடியடி நடத்தி போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைக்க உத்தரவிட்டார்.

அமலாபுரத்தில் நடந்த கலவரத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் கைது செய்து, பஸ்ஸொன்றில் ஏற்றினர். அப்போது, இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டக்காரர்கள் அந்த பஸ்ஸை தீ வைத்து கொளுத்தினர். மேலும், அம்மாவட்ட நீர்ப்பாசனத்துறை அமைச்சர் விஷ்வரூப் முகாம் அலுவலகத்தை சூறையாடி தீ வைத்து கொளுத்தினர். இதனால், மாவட்டத்தின் பல்வேறு இடங்கள் போர்க்களம்போல் மாறியது. மேலும் அசம்பாவித சம்பவங்கள் நடக்காமலிருக்க பொலிஸார் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அமலாபுரத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன், 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பேரணிகள், போராட்டங்கள் அல்லது பொதுக்கூட்டங்களுக்கு அனுமதியில்லை என எஸ்பி தெரிவித்துள்ளார். மாவட்ட பெயர் மாற்றம் தற்போது முதலமைச்சர் ஜெகன்மோகன் அரசுக்கு புதிய தலைவலியாக மாறியுள்ளது.

கோணசீமா மாவட்டத்திற்கு அம்பேத்கரின் பெயரை சூட்டவேண்டும் என்று அம்பேத்கரின் ஆதரவாளர்கள் கூறி வந்தனர். தற்போது, பெயர் மாற்றிய பின்னர் இப்போது கோணசீமா பெயரே இருக்கவேண்டும் என போராட்டங்கள் நடந்து வருகின்றன.

# இந்திய செய்திகள்

## சர்வதேச திரைக்கலைஞர்களை திகைக்க வைத்த 'இரவின் நிழல்'



தமிழ்த் திரைப்பட இயக்குநரும், நடிகருமான ராதாகிருஷ்ணன் பார்த்திபனின் 'இரவின் நிழல்' திரைப்படம், கேன்ஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டு சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

பிரான்ஸில் நடைபெற்றுவரும் 75ஆவது கேன்ஸ் திரைப்பட விழவில் பல நாட்டு திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன. தமிழ்த் திரைப்பட உலகில் இருந்தும் பல நடிகர்கள், படைப்பாளிகள் கேன்ஸ் சென்றுள்ளனர். இந்நிலையில், நடிகர் பார்த்திபன் இயக்கி, நடித்துள்ள 'இரவின் நிழல்' திரைப்படம், கேன்ஸ் விழாவில் மே 22ஆம் திகதி திரையிடப்பட்டது. மொத்தம் 100 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்தப் படம் முழுவதும் ஒரே ஷொட்டில் எடுத்து முடிக்கப்பட்டது.

இதற்காக 64 ஏக்கர் நிலத்தில் 50இற்கும் மேற்பட்ட அரங்கங்கள் அமைக்கப்பட்டு, 90 நாட்கள் படப்பிடிப்பு நடத்தப்பட்டுள்ளது. இத்திரைப்படம் கேன்ஸ் விழாவில் திரையிடப்பட்டது. நான்லீனியர் எனப்படும் சம்பவங்கள் முன் பின் மாறி, மாறி நிகழும் திரைக்கதையை ஒரே ஷொட்டில் எடுத்துள்ளதை கண்டு சர்வதேச திரைக்கலைஞர்கள் திகைத்து ஆச்சரியமடைந்தனர். 'இரவின் நிழல்' திரைப்படம், கேன்ஸ் விழாவில் சிறப்பு கவனம் பெற்றுள்ளது.

# வீரப்பனின் அண்ணன் மாதையன் காலமானார்



சேலம் மத்திய சிறையில் ஆயுள்தண்டனை அனுபவித்துவந்த சந்தனக் கடத்தல் வீரப்பனின் சகோதரர் மீசை மாதையன் உடல்நலக்குறைவால் உயிரிழந்தார்.

தமிழகம், கர்நாடகா, கேரளா மாநில பொலிஸாருக்கு 25 ஆண்டுகாலமாக கண்ணாமூச்சி காட்டி வந்தவர் சந்தன மரக்கடத்தல் வீரப்பன். 2004ஆம் ஆண்டு தமிழக அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். சந்தன மரக்கடத்தல் வீரப்பனின் அண்ணன் மாதையன் (வயது 80). இவர் கடந்த 1987இல் சத்தியமங்கலத்தில் ரேஞ்சர் சிதம்பரம் கொலை வழக்கில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட அவர், கடந்த 35 ஆண்டுகளாக சிறையிலிருந்தார். இவரை விடுதலை செய்ய வேண்டும் என சில அரசியல் கட்சியினர் கோரிக்கை எழுப்பி வந்தனர்.

இந்நிலையில், உடல்நிலை பாதிக்கப்பட்ட மாதையன் கடந்த 15 நாட்களுக்கு முன்னர் பரோலில் திரும்பினார். மீண்டும் மாதையனுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டதையடுத்து அவர் சேலம் அரச மருத்துவமனையில் கடந்த 10 நாட்களாக சிகிச்சைபெற்று வந்தார். நேற்று முன்தினம் அவரின் உடல்நிலையை பரிசோதித்த டொக்டர்கள், அவர் ஆபத்தான நிலையிலிருப்பதை தெரிவித்தனர். இது தொடர்பாக பொலிஸார், மாதையனின் மனைவி மாரியம்மாள் மற்றும் உறவினர்களுக்கு தகவல் அளிக்கப்பட்டது. நேற்று அதிகாலையில் மாதையன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். தொடர்ந்து அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு மாதையனின் உடலை அவரது உறவினர்களிடம் ஒப்படைப்பட்டது..

இந்நிலையில், தந்தையின் குறித்து மாதையனின் மகள் ஜெயம்மாள் தெரிவிக்கையில்,

"முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலைசெய்த வழக்கில் கைதான பேரறிவாளனை விடுதலைசெய்த அரசு, தவறே செய்யாத எனது தந்தையை 36 ஆண்டுகாலம் சிறையிலடைத்து சித்திரவதை செய்துள்ளது. கடைசிவரை எங்களோடு அவர் வராமலேயே உடல்நலக்குறைவால் உயிரிழந்துவிட்டார். இது எங்களுக்கு பெரும் சோகத்தை கொடுத்திருக்கிறது" என கண்ணீர் மல்க வேதனை தெரிவித்தார்.

## இராமேஸ்வரத்தில் பதற்றம்:

# மீனவப் பெண் எரித்துக் கொலை; வடமாநில இளைஞர்கள் அறுவர் கைது





இராமேஸ்வரத்தில் மீனவப் பெண்ணொருவர் வடமாநிலத்தைச் சேர்ந்த இளைஞர்கள் 6 பேரால் வன்கொடுமைக்குட்படுத்தப்பட்டு எரித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இக்கொடூரச் சம்பவத்தால் அதிர்ச்சியடைந்த கிராம மக்கள் திரண்டு இறால் பண்ணையொன்றை தீ வைத்து எரித்தனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகின்றது. இதனால் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வடகாடு பகுதியைச் சேர்ந்த பாலு. இவரது மனைவி சந்திரா (வயது 40) கடல் பாசி எடுக்கும் தொழில் செய்து வருகிறார். இதே பகுதியில் தனியாருக்குச் சொந்தமான இறால் பண்ணை உள்ளது. இந்தப் பண்ணையில் ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த 6 இளைஞர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை காலையில் சந்திரா கடல் பாசி எடுக்கச் சென்றுள்ளர். இரவு வரை வீடு திரும்பவில்லை. இதனைத் தொடர்ந்து குடும்பத்தினர் மற்றும் கிராம பொதுமக்கள் தேடிச்சென்றுள்ளனர். இறால் பண்ணையில் நிர்வாண நிலையில் எரிந்த நிலையில் உடல் காணப்பட்டது.

இதனை அறிந்த கிராம மக்கள் அதிர்ச்சியடைந்தனர். இறால் பண்ணையில் இருந்தவர்கள் மீனவப் பெண்ணை கூட்டு பாலியலுக்கு உட்படுத்தி இறந்தவுடன் எரித்துக் கொலைசெய்துள்ளமை தெரியவந்தது. இதையடுத்து, கிராம மக்கள் திரண்டு இறால் பண்ணைக்கு தீ வைத்துள்ளனர். அங்கு வந்த பொலிஸார் குறித்த வடமாநில இளைஞர்கள் 6 பேரையும் கைதுசெய்துள்ளனர்.

மேலும், கிராம மக்கள் திரண்டுள்ளதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் இறால் பண்ணையை விட்டு ஒரிசா மாநில இளைஞர்களை பொலிஸார் வெளியே கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டதால் இராமநாதபுரத்திலிருந்து பாதுகாப்புக்காக மேலதிகமாக பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

இராமேஸ்வரத்தில் மீனவப் பெண் கூட்டு பாலியல் வன்கொடுமை சம்பவத்தால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இராமேஸ்வரம் பஸ் நிலையம் முன்பு பொதுமக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதுடன், அப்பகுதியில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, கடைகள் அடைக்கப்பட்டுள்ளதால் பதற்றம் நிலவுகின்றது.

# மோடியும் தலைப்பாகையும்





இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வித்தியாசமான தலைப்பாகைகளை அணிவதில் ஆர்வம் கொண்டவர். அந்தவகையில் இந்தியாவின் ஒவ்வொரு பகுதிக்கும் விஜயம் மேற்கொள்ளும்போது அந்தந்த பகுதி மக்களின் பாரம்பரிய உடைகள், தலைப்பாகைகள் போன்றவற்றை அணிந்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

# இலங்கைக்கு வெடிபொருட்கள் கடத்தல்: இருவருக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை

## பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு




இலங்கைக்கு வெடிபொருட்கள் கடத்திய வழக்கில் இலங்கையர்கள் இருவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 3 பேருக்கு தலா ஒரு வருடம் சிறைத் தண்டனையும் வழங்கி பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சென்னையில் வெடிகுண்டு கடத்தல் நடக்கவுள்ளதாக கடந்த 2007 ஜனவரி 23ஆம் திகதி உளவுத்துறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், சென்னை பெரியமேட்டில் பொலிஸார் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது, அவர்கள் இலங்கைக்கு 2 தொன் இரும்புக் குண்டுகளை கடத்தவிருந்தமை தெரியவந்தது. இதையடுத்து, இந்தக் கடத்தலில் தொடர்புடைய இலங்கையைச் சேர்ந்த சிவகரன், வேலுசாமி, கிரிதரன், முத்து, கருணாகரன் உள்ளிட்ட 13 பேரை பொலிஸார் கைதுசெய்தனர். இலங்கைக்கு கடத்த முயன்ற 2 தொன் இரும்புக் குண்டுகளை பொலிஸார் கைப்பற்றினர்.

அவர்களிடம் நடந்த விசாரணையின் அடிப்படையில் தூத்துக்குடியிலிருந்து கடத்தப்படவிருந்த 60 மூடை இரும்பு போல்ரஸ் குண்டுகள் கைப்பற்றப்பட்டன. சென்னை ஜெகன் டிராவல் ஏஜென்சியில் இருந்தும் 50 மூடை போல்ரஸ் குண்டுகள் கைப்பற்றப்பட்டன. அவர்கள் மீது வெடிபொருள் தடுப்பு சட்டப் பிரிவு, கூட்டுச்சதி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் மொத்தம் 13 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணை பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் நடந்துவந்தது. அரசு சிறப்பு வழக்கறிஞர் என்.விஜயராஜ் ஆஜராகி சாட்சிகளை விசாரித்தார். வழக்கு நடந்த காலகட்டத்தில் 7 பேர் தலைமறைவாகி விட்டனர். ஒருவர் இறந்துவிட்டார்.

இதையடுத்து, மீதமிருந்த சிவகரன், வேலுசாமி, கிரிதரன், முத்து, கருணாகரன் ஆகியோர் மீதான வழக்கு மட்டும் பிரித்து விசாரிக்கப்பட்டது. இந்த வழக்கில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி இளவழகன் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தார். தீர்ப்பில், சிவகரன், முத்து ஆகியோருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், மற்ற 3 பேருக்கு தலா ஒரு வருடம் சிறைத்தண்டனையும் விதித்து உத்தரவிட்டார்.

# பழ.நெடுமாறனை சந்தித்த பேரறிவாளன்



ராஜீவ்காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலையான பேரறிவாளன், அவரது தாய் அற்புதம்மாள் ஆகியோர் தமிழர் தேசிய முன்னணித் தலைவர் பழ.நெடுமாறனை அவரது இல்லத்துக்குச் சென்று நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினர்.

இதுகுறித்து பழ.நெடுமாறன் தெரிவிக்கையில்,

32 ஆண்டுகள் சிறையிலிருந்த பேரறிவாளன் உச்ச நீதிமன்றத்தால் விடுதலைசெய்யப்பட்டு வெளியில் வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த வழக்கு தொடர்பான 6 பேரும் அவர்கள் வாழ்க்கையை புனரமைத்துக்கொள்ள தேவையான உதவிகளை மத்திய, மாநில அரசுகள் செய்ய வேண்டும்.

அரசியல் சட்டப்படி அமைச்சரவை என்ன பரிந்துரை செய்கிறதோ அதன்படி நடக்க வேண்டியவர் ஆளுநர். ஆனால், அரசியல் சட்டத்தில் எத்தனை நாட்களில் முடிவெடுக்க வேண்டும் என்று சொல்லாத காரணத்தால் இவர்கள், அதனைப் பயன்படுத்தி ஆண்டுக்கணக்கில் கிடப்பில் போடுகிறார்கள். உச்ச நீதிமன்ற தீர்ப்பின் மூலம் ஆளுநர் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டது. ஆகவே, இனிமேல் ஆளுநர் இதை மீறி செயற்பட்டால் அரசியல் சட்டத்துக்கு எதிரானதாகும்'' - என்றார்.






# அமெரிக்க டெக்சாஸ் மாகாண ஆரம்பப் பாடசாலையில் துப்பாக்கிச்சூடு

## 19 மாணவர்கள் - இரண்டு ஆசிரியர்கள் உட்பட 21 பேர் உயிரிழப்பு; பலர் படுகாயம்

- 18 வயது துப்பாக்கிதாரி சுட்டுக்கொலை
- ஆயுத சட்டம் கடுமையாக்கப்படும் - பைடன்

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் ஆரம்பப் பாடசாலையொன்றுக்குள் புகுந்த 18 வயது இளைஞரொருவர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 19 மாணவர்கள் இரண்டு ஆசிரியர்கள் உட்பட 21 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவத்துக்கு அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்துள்ள அவர், சனிக்கிழமை வரை அமெரிக்க தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என்று அறிவித்தார்.

டெக்சாஸ் மாகாணத்தில் சான் அன்டோனியோவிற்கு மேற்கே 85 மைல் தொலைவிலுள்ள உவால்டேயிலுள்ள ரொப் என்ற பாடசாலை செயற்பட்டு வருகிறது. நேற்றுமுன்தினம் முற்பகல் அங்கு வகுப்புகள் நடந்துகொண்டிருந்தபோது, பாடசாலைக்குள் நுழைந்த 18 வயது இளைஞரொருவர் திடீரென அங்கிருந்த மாணவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டார்.

உடனடியாக ஆசிரியர்களும் பிற ஊழியர்களும் அவரை பிடிக்க முயன்றபோது, அவர்கள் மீதும் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினார்.

இச்சம்பவம் குறித்து தகவலறிந்து வந்த டெக்சாஸ் பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்திய இளைஞரை சுட்டுக் கொன்றனர்.

இச்சசம்பவம் குறித்து தெரிவித்த டெக்சாஸ் ஆளுநர் கிரேக் அபாட், துப்பாக்கிச்சூடு நடத்தியவர் உவால்டேயில் வசிக்கும் 18 வயதான இளைஞர் சால்வடோர் ரொமா (Salvador Roma) ஆவார். அவர் தனது வாகனத்தை பாடசாலைக்கு வெளியே நிறுத்திவிட்டு பாடசாலைக்குள் கைதுப்பாக்கியுடன் நுழைந்துள்ளார்.

அவர் ஒன்றுக்கும் மேற்பட்ட துப்பாக்கிகளை வைத்திருந்ததாகவும் தெரிகிறது. இந்த துப்பாக்கிச் சூட்டில் பாடசாலை வளாகத்திலேயே 14 மாணவர்கள் கொல்லப்பட்டனர். ஆசிரியர்கள் சிலரும் உயிரிழந்தனர். துப்பாக்கிச்சூடு நடத்திய இளைஞர் ரொமா பொலிஸாரின் பதில் தாக்குதலால் கொல்லப்பட்டுள்ளார் - என்றார்.


துப்பாக்கிதாரி





இந்த துப்பாக்கிச்சூட்டில் 19 மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், இரண்டு ஆசிரியர்களும் பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயமடைந்த 8 மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

துப்பாக்கிச்சூட்டிற்கான காரணம் குறித்து டெக்சாஸ் பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

**ஆயுத சட்டம் கடுமையாக்கப்படும் - பைடன்**

துப்பாக்கிச்சூட்டு சம்பவம் குறித்து ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவிக்கையில்,

''டெக்ஸாஸில் 18 குழந்தைகள் கொல்லப்பட்ட சம்பவம் என்னை தூங்க விடாது.பெற்றோர் தங்கள் குழந்தைகளின் முகங்களை இனி பார்க்க முடியாது. எத்தனை உயிர்கள் நொறுங்கியுள்ளன. துப்பாக்கி சட்டத்தை நிறைவேறவிடாமல் தடுத்து தாமதம் செய்பவர்களை மறக்க மாட்டோம்.


அமெரிக்காவில் சமீபகாலமாக கல்விக்கூடங்களில் அதிகரித்துவரும் துப்பாக்கிக் கலாசாரம், ஆயுத சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்துகின்றன.

பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்ட தகவலையறிந்து பெரும் அதிர்ச்சியடைந்தேன். ஏன் இந்தப் படுகொலைகள்? இதுபோன்ற படுகொலைகளுடன் வாழ நாம் ஏன் தயாராக இருக்கிறோம்? இதுபோன்ற சம்பவங்கள் ஏன் நடைபெறுகின்றன? இதை சமாளிப்பதற்கும், ஆயுதக் கடத்தல்காரர்களை எதிர்ப்பதற்கும் துணிச்சல் நமக்கு ஏன் இல்லை. பெற்றோர் தற்போது அனுபவித்துவரும் வலியை ஆயுதங்களுக்கு எதிரான செயலாக மாற்றவேண்டிய நேரம் இது - என்றார்.

இதேவேளை, ''மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி தனது இதயத்தை தூள் தூளாக்கி இருப்பதாகவும் அமெரிக்கத் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார். இதுபோன்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இனிமேலும் நிகழாமல் தடுக்க துணிச்சலான முடிவுகளை பிடன் அரசு எடுக்கும் என்றும் கமலா ஹாரீஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# உலக செய்திகள்

## ரஷ்ய ஜனாதிபதி புட்டினைக் கொல்ல சதித்திட்டம்: உக்ரைன் உளவுத்துறை தலைவர் பரபரப்புத் தகவல்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை படுகொலை செய்ய இரண்டு மாதங்களுக்கு முன்பே சதி நடைபெற்றதாக உக்ரைன் பாதுகாப்புத்துறை அதிகாரியான கைரிலோ புதானோவ் தெரிவித்துள்ளார்.

இந்த சதியிலிருந்து புட்டின் உயிர் தப்பியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். புட்டினைக் கொல்ல நடந்த சதி பற்றி தகவல் வெளியாகவில்லை என தெரிவித்த கைரிலோ, Caucasus கருப்புக் கடலுக்கும் காஸ்பியன் கடலுக்கும் உள்ள பிராந்தியமாகும். இதில் ஆர்மேனியா, ஜோர்ஜியா, ரஷ்யாவின் சில பகுதிகள் உள்ளடங்கியுள்ளன. காக்கசஸ் பிரதிநிதிகள் சிலரால் புட்டினைக் கொல்ல சதி நடந்ததாக உக்ரைன் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## உலக சுகாதார அமைப்பின் தலைவராக மீண்டும் டெட்ராஸ்




உலக சுகாதார அமைப்பின் தலைவராக டெட்ரொஸ் எதனோம் கெப்ரியாசெஸ் வயது 57 மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் தலைவராக, ஆபிரிக்க நாடான எத்தியோப்பியாவை சேர்ந்த டெட்ரொஸ் அதனோம் கெப்ரியாசிஸ் (Tedros Adhanom Ghebreyesus), 2017இல் பதவியேற்றார். எத்தியோப்பிய வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த அவர், உலக சுகாதார அமைப்பின் தலைவராக பதவியேற்ற முதல் ஆபிரிக்க நாட்டவர் என்ற பெருமையை பெற்றார்.

மேலும், டொக்டராக இல்லாத ஒருவர் இந்தப் பதவியை வகித்ததும் இதுவே முதன்முறையாகும்.

அவருடைய பதவிக்காலம் நிறைவடையவுள்ள நிலையில், புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பு வெளியானது. ஆனால், எவரும் போட்டியிடாததால், அவர் ஐந்து ஆண்டுகளுக்கு இந்தப் பதவிக்கு மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## உலகின் மிகக் குள்ளமானவர்: நேபாள இளைஞர் கின்னஸ் சாதனை




நேபாளத்தைச் சேர்ந்த 18 வயதான இளைஞர் ஒருவர் உலகின் மிகக் குள்ளமான மனிதர் என கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

நேபாளத்தைச் சேர்ந்த டோர் பகதூர் கபாங்கி, 73 சென்றிமீற்றர் மட்டுமே ((2.5 அடி)) உயரம் கொண்ட இவர், உலகில் உயிர் வாழும் மனிதர்களில் மிகக் குள்ளமானவர் என கின்னஸால் அங்கீகரிக்கப்பட்டு சான்றிதழைப் பெற்றார். உலகின் மிக உயரமான மலையான மவுண்ட் எவரெஸ்ட் அமைந்துள்ள நேபாளத்தில் உலகின் மிகக் குள்ளமான நபரும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பல நாடுகள் இறக்குமதித் தடை: 6.2 கோடி பீப்பாய் ரஷ்ய மசகு எண்ணெய்; கப்பல்களில் தேக்கம்




ரஷ்யாவிடம் மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதை பல்வேறு நாடுகள் நிறுத்தியதால், 6.2 கோடி பீப்பாய் மசகு எண்ணெய் டேங்கர் கப்பல்களில் தேங்கியுள்ளன.

உக்ரைன் போரை தொடர்ந்து சர்வதேச சந்தையில் பெயர்பெற்ற ரஷ்யாவின் யூரல் மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதை அமெரிக்க உட்பட பல்வேறு நாடுகள் நிறுத்தின.

போருக்கு முன் தினமும் 80 இலட்சம் பீப்பாய் மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்ட நிலையில், தற்போது 67 இலட்சம் பீப்பாயாக குறைந்துள்ளது. இதனால், இதுவரை இல்லாத வகையில் 6.2 கோடி பீப்பாய் மசகு எண்ணெய் ரஷ்ய துறைமுகங்களில் தேங்கியுள்ளது.

ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளுக்கு தற்போது மசகு எண்னெய் ஏற்றுமதி செய்யப்பட்டுவரும் நிலையில், ஐரோப்பிய கூட்டமைப்பும் விரைவில் தடை விதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

## ரஷ்ய வீரர்களின் சடலங்களை சேகரிக்கும் உக்ரைன் வீரர்கள்

**கார்கீவ்வில் 60 பேரின் சடலங்கள் மீட்பு**



ரஷ்யப் படைகளால் சிறை வைக்கப்பட்டுள்ள உக்ரைன் வீரர்களை பரிமாற்றம் செய்துகொள்வதற்காக போரில் உயிரிழந்த ரஷ்ய வீரர்களின் சடலங்களை உக்ரைன் வீரர்கள் கைப்பற்றி வருகின்றனர்.

ரஷ்ய கட்டுப்பாட்டிலிருந்த கார்கீவ் பகுதியை மீண்டும் கைப்பற்றிய உக்ரைன் வீரர்கள், தன்னார்வலர்கள் உதவியுடன் ரஷ்ய வீரர்கள் 60 பேரின் சடலங்களை மீட்டனர்.

அடையாள அட்டைகள், கிரெடிட் கார்ட்கள், டி.என்.ஏ. பரிசோதனை மூலம் இறந்தவர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

ரஷ்யா வசமுள்ள உக்ரைன் வீரர்களின் சடலங்கள் அல்லது சிறைக் கைதிகளை பரிமாற்றிகொள்ள இவற்றை சேகரித்து வருகின்றனர்.

## பிரிட்டன் ராணியாக முடிசூட்டப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவு: 15 கிலோ எடையில் மிகப்பெரிய தங்க நாணயம் வெளியீடு!




பிரிட்டன் ராணியாக எலிசபெத் முடிசூட்டப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவடைவதை அடுத்து மிகப்பெரிய தங்க நாணயம் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது 96 வயதான எலிசபெத் பிரிட்டன் ராணியாக கடந்த 1952ஆம் ஆண்டு முடிசூட்டப்பட்டார்.

பிரிட்டன் ராணியாக அதிக ஆண்டுகள் இருக்கும் இவரது 70ஆம் ஆண்டு பிளாட்டினம் ஜூபிலியை ரோயல் அரண்மனை நான்கு நாட்கள் விழாவாக ஜூன் மாதம் கொண்டாடவுள்ளது.

அவரது பிளாட்டினம் ஜூபிலியை முன்னிட்டு 15 கிலோ எடையில் மிகப்பெரிய தங்க நாணயம் வெளியிடப்பட்டுள்ளது.

8.7 அங்குலம் விட்டம் கொண்ட இந்த நாணயத்தை செய்ய 400 மணிநேரம் ஆனதாகவும், இதன் மதிப்பு 18 ஆயிரத்து 772 டொலர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7